பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 சித்திரை 16 திங்கட்கிழமை (28.04.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 154

# மணலாறு இராணுவ முன்னரங்கப் பகுதி மீது புலிகளின் விமானங்கள் அதிரடித் தாக்குதல்!

## முறியடிக்கப்பட்டதாக படைத்தரப்பு தெரிவிப்பு

கொழும்பு, ஏப்ரல்28

**தமிழீழ விடுதலைப் புலிகளின் இரண்டு விமானங்கள் நேற்று அதிகாலை 1.43 மணியளவில் மணலாறு (வெலிஓயா) இராணுவ முன்னரங்க நிலைகளை இலக்குவைத்து விமானக்குண்டு வீச்சுத் தாக்குதல்களை - அதிரடித் தாக்குதல்களை - நடத்தியுள்ளன. இராணுவத் தரப்பினால் இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.**

தமிழீழ விடுதலைப் புலிகள் வீசிய 3 குண்டுகள் வெடித்த போதிலும் எவ்வித மான சேதங்களும் பாதுகாப்புத் தரப்பின ருக்கு ஏற்படவில்லை எனவும் தெரிவிக் கப்படுகிறது.

மணலாறு 233 படையணி தலைமைய கமும், மணலாறு பிராந்திய கட்டளையி டும் தலைமையகமும் பாதுகாப்பு முன்ன ரங்கு பிரதேசத்தி லேயே உள்ளமை குறிப் பிடத்தக்கது.

எனினும் தமிழீழ விடுதலைப் புலிக ளினால் மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக் குதல் மூலம் குறித்த முகாம் சேதமடைந் துள்ளது என உறுதிபடுத்தப்படாத செய்தி ஒன்றும் வெளியாகியுள்ளது.

தாக்குதல்கள் முறியடிக்கப்பட்டன

இது தொடர்பாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதயநாணயக்காரவிடம் கேட்ட போது,

"முன்னரங்க காவலரண் பகுதிகளுக்கு எந்தவிதமான சேதமும் ஏற்படவில்லை. விடுதலைப் புலிகளுடைய விமானங்க ளின் வருகையை ராடர் திரை மூலம் அறிந்த

(12ஆம் பக்கம் பார்க்க)

## மணலாறு, ஜனகபுரவில் சனியன்று கடும் சண்டை

கொழும்பு, ஏப் 28

மணலாறு, ஜனகபுரம் பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை கடும் மோதல்கள் நடைபெற்றதாக இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார இத்தகவலைத் தெரிவித்தார். பலமணிநேரம் இடம்பெற்ற இந்த மோத லில் 7 படையினர் கொள்ளப்பட்டனர், 13 பேர் காயமடைந்தனர் என்று அவர் சென்னார்.

சனிக்கிழமையன்று 22 புலி உறுப்பினர் கள் கொல்லப்பட்டனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

படையினர் மேற்கொண்ட முன்நகர்வு முயற்சியை முறியடித்துவிட்டதாகப் புலிகள் நேற்று அறிவித்திருந்தனர். (அ-01)

## கிளிநொச்சியில் இருந்து தெற்குக்கு 5,000 மெற்றிக் தொன் அரிசி

கிளிநொச்சி,ஏப்.28

கிளிநொச்சியில் இருப்பில் உள்ள 5 ஆயிரம் மெற்றிக்தொன் அரிசியை தென்னி லங்கைக்கு அனுப்புவதற்கு ஏற்பாடு செய் யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி அரச அதிபர் நா.வேதநாய கன் இத்தகவலை உதயனுக்குத் தெரிவித் தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட அரிசியை வவுனியா ஊடாக வர்த்தக அமைச்சுக்கு அனுப்பிவந்தோம். ஆனால் கடந்த சில மாதங்களாக அப்பணி நிறுத்தப்பட்டிருந்தது. குறிப்பிட்ட காலப் பகுதியில் கிளிநொச்சி மற்றும் வன்னி மாவட்டங்களில் தொடர்ந்து பெருமழை பெய்தது. அதனால் நெல் அறுவடையில் பலத்த வீழ்ச்சி ஏற்படும் என எதிர்பார்த்தே தெற்கே அரிசி அனுப்புவது நிறுத்தப்பட்டி ருந்தது. இந்தப் பணி மீண்டும் ஆரம்பிக்கப் பட உள்ளது.

இப்போது கையிருப்பில் உள்ள அரிசியில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மடுவை சமாதான வலயமாக்குமாறு ஆயர்கள் விடுத்த கோரிக்கை நிராகரிப்பு

கொழும்பு,ஏப்.28

மடுதேவாலய பிரதேசத்தை சமாதான வலயமாக பிரகடனப்படுத்துமாறு அரசிடம் கத்தோலிக்க ஆயர்கள் விடுத்த வேண்டு கோள் நிராகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரி விக்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீண்டு மொரு முறை மடு தேவாலயப் பிரதேசத் திற்குள் பிரவேசிப்பதை தடுக்கவேண்டும் என்று இராணுவத்தினர் அரசிடம் கோரியி ருந்தனர். அதக்கு அமையவே அரசு இந்த நிராகரிப்பைச் செய்துள்ளது என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண் டாரநாயக்காவின் ஆட்சிக் காலத்திலும் மடு தேவாலயப் பிரதேசம் இராணுவத்தி னரால் கைப்பற்றப்பட்டது. பின்னர் அந்தப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வாகனங்கள் சகிதம் போரிடுவோருக்கு முகமாலைப் பகுதி மரணப் பொறி போன்றது

### ஆய்வாளர்கள் வெளியிடும் கருத்து

கொழும்பு,ஏப்.28

முகமாலையின் புவியியல் அமைப்பும் விடுதலைப் புலிகளின் தந்திரோபாயமும் இணைந்து இராணுவம் யாழ். குடாநாட்டி லிருந்து முன்னேறி விடுதலைப் புலிக ளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிக்கு செல்வ தற்குத் தடையாக அமைந்துள்ளன என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மோதல் நடைபெறும் பகுதி மிகவும் குறுகலானது நகர்வுகளை மேற்கொள்ள வாய்ப்பில்லை. இதன் காரணமாக பெரும ளவு படையணியையும், இராணுவ வாகனங் களையும் கொண்டு போரிடுபவர் களுக்கு இது மரணப்பொறி போன்றது என்றும் அவர் தெரிவிக்கின்றார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## இரு தரப்புகளும் உறுதி தந்தால் மட்டுமே மாதா சொரூபம் மடுவுக்கு

### மன்னார் ஆயர் சொல்கிறார்

மன்னார்,ஏப்.28

மடுத்தேவாலயப் பகுதியை எம்மிடம் ஒப்படைக்க படையினர் தயாராக இருக் கின்றனர். இதுதொடர்பாக இன்று குருமாரு டன் ஆராய்ந்த பின்பே முடிவு செய்யப்ப டும்.

மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மடுத்தேவாலயம் இன்னமும் எம்மிடம் ஒப்படைக்கப்படவில்லை. ஒப்படைக்க விருப்பம் என படையினர் தெரிவித்துள்ளனர்.

திங்கட்கிழமை (இன்று) எல்லாக் குரு மாரும் கூடி ஆலோசனை நடத்தவிருக்கிறோம். அதில் எடுக்கப்படும் தீர்மானத்தின்படி செயற்படுவோம். (12ஆம் பக்கம் பார்க்க)

### புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள்கள்

5ஆம் ஆண்டு புலமைப்பரிசிப் பரீட் சைக்குத் தேற்றும் மாணவச் செல்வங் களே!

உதயன் வருடந்தோறும் வழங்கும் பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்கள் உங் கள் உதயனில் இனிமேல் செவ்வாய் மற் றும் வியாழக்கிழமைகளில் தொடர்ந்து வெளிவரும்.

## கிழக்குத் தேர்தலில் வெற்றிபெறும் நோக்குடனேயே முகமாலைத் தாக்குதல்

### அரசு தனக்குத் தேவைப்படும் போது தாக்குதல் நடத்தித் தோற்கிறது

கொழும்பு,ஏப்.28

கிழக்குத் தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்பதற்காகவே அரசு முக மாலையில் தாக்குதலை மேற்கொண்டது. அதில் அதிகமான படையினர் கொல்லப் பட்டனர்.

2008ஆம் ஆண்டுக்கான வரவு - செல வுத் திட்ட வாக்கெடுப்பில் வெல்ல வேண் டும் என்பதற்காகவும் அப்போது அரசு இராணுவத் தாக்குதலை நடத்தியது. அதில் சுமார் 200 படையினர் உயிரிழந்தனர்.

அரசு தனக்குத் தேவை ஏற்படும் போதெல்லாம் படை நடவடிக்கை மேற் கொண்டு தோற்றுப் போகிறது.

வடக்கில் படை நட வடிக்கை முன் னெடுக்கப்படும் போது தெற்கு மக்களைப் பாதுகாப்பதற்கான திட்டத்தை அரசு வகுக்கவேண்டும் இல்லையேல் தெற்கில் அழிவு ஏற்படுவதைத் தடுக்கமுடியாது.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல.

(12ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலை மோதலையடுத்து கட்டளை அதிகாரி பதவிநீக்கம்

### 'த சண்டே ரைம்ஸ்' வார ஏடு தகவல்

கொழும்பு,ஏப்.28

வட போர்முனையான முகமாலை கள முனையில் கடந்த புதன்கிழமை இராணு வம் சந்தித்த பேரிழப்பைத் தொடர்ந்து 53 ஆவது படையணியின் கட்டளை அதிகாரி பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

- இவ்வாறு "த சண்டே ரைம்ஸ்" வார ஏடு தனது பாதுகாப்பு ஆய்வில் தெரிவித் துள்ளது.

அதன் முக்கிய பகுதிகள் வருமாறு:-

முகமாலை களமுனை படையினரின் கொல்களமாக மாற்றமடைந்துள்ளது. மஹிந்த வின் காலப்பகுதியில் இக்களமுனையில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கட்டுநாயக்க பகுதியில் திடீர் தேடுதல்; 17 தமிழர்கள் உட்பட 28 பேர் கைது

கொழும்பு,ஏப்.28

கட்டுநாயக்க விமான நிலையத்தை அண்டிய பிரதேசங்களில் பொலிஸாரும் படையினரும் இணைந்து நடத்திய விசேட சுற்றிவளைத்துத் தேடுதலின்போது 17 தமி ழர்கள் உட்பட 28 பேர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். நேற்று அதிகாலை 2 மணிமுதல் நேற்று மாலை வரை மேற்கொண்ட சுற்றிவளைப்புத் தேடு தலின்போதே இவர்கள் கைது செய்யப்பட் டனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரு மான என்.கே.இலங்கக்கோன் தெரிவித் தார்.

ஈரான் ஜனாதிபதி மஹ்மூத் அஹ்மடீன் நஜாட் இலங்கைக்கு இரண்டு நாள் விஜ யத்தை மேற்கொள்வதை முன்னிட்டே

(12ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உ
குகமயம்

## ஸ்ரீ பால கதிர்காம தேவஸ்தானம் நல்லூர்

### பாலசம்ரட்ஷணா வழங்கும் முருக பக்திப் பாடல்கள் ஒலி, ஒளி இறுவெட்டு வெளியீட்டு விழா

இடம் : திவ்யஜீவன சங்க மண்டபம்
காலம் : 04.05.2008 ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணி
பாடலை இயற்றியவர் : வித்துவான் ந.வீரமணிஐயர்
இசையமைப்பு : ஜி.அற்புதன்.
(சி/552603) - தேவஸ்தானம்.

## கேள்வி அறிவித்தல் - 2008

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் மரத்தினாலான வகுப்பறைத் தடுப்புக்கள் (நகர்த்தக்கூடியது) செய்து வழங்குவதற்கான கேள்விகள் எம்மால் கோரப்படுகின்றன. கேள்விதாரர் அரச பதிவு செய்யப்பட்ட மரத்தளபாட உற்பத்தியாளராக இருத்தல் வேண்டும்.

1. வகுப்பறைத் தடுப்பிற்கான மாதிரி வரைபடம் மற்றும் அளவுகள் பாடசாலை வேலைகள் பகுதியில் பெற்றுக் கொள்ள முடியும்.
2. தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் பெயர் குறிப்பிடப்படும் பாடசாலைகளுக்கு நேரடியாக வகுப்பறைத் தடுப்புக்களை விநியோகித்தல் வேண்டும்.
3. கேள்விப் படிவங்கள் 29.04.2008 ஆம் திகதியிலிருந்து 09.05.2008 ஆம் திகதி பிற்பகல் 2 மணி வரை வழங்கப்படும். கேள்விகள் யாவும் எம்மால் 16.05.2008ஆம் திகதி முற்பகல் 11 மணிவரை ஏற்றுக் கொள்ளப்பட்டு அன்றைய தினம் எமது அலுவலகத்தில் முற்பகல் 11.30 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும்.
4. மீளளிக்க முடியாத படிவக் கட்டணம் - ரூபா 500.00
மீளளிக்கக் கூடிய வைப்புப் பணம் - ரூபா 3,500.00

பாடசாலை வேலைகள் கிளை,
*வலயக் கல்வி அலுவலகம்,*
*தென்மராட்சி, சாவகச்சேரி.* (சி/552594)

கு.பிறேமகாந்தன்
*வலயக் கல்விப் பணிப்பாளர்,*
*தென்மராட்சி.*

## மரண அறிவித்தல்

### திருமதி கனகம்மா இராசையா (பூரணம் ஆச்சி)



கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா இராசையா கடந்த புதன்கிழமை (23.04.2008) அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும் சின்னமணி (கனடா), மனோகரன் (கனடா), மகேசன் (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயும் சபாரத்தினம் (கனடா), மகேஸ்வரி (கனடா), ஜெகதாம்பிகை (கொழும்பு) ஆகியோரின் அன்புமாமியும் காலஞ்சென்ற கிருபாகரன் மற்றும் கிருஷ்ணலீலா (லீலா), சிவநேசன் (பொறியியலாளர்,C.T.B., கோண்டாவில்), ஜெயராணி(ராணி),கனடாவில் வசிப்பவர்களான அமிர்தலிங்கம், சாரதாதேவி (தேவி), சிறீதரன், கௌரி, சிறீபாஸ்கரன், மகா, சிறீகாந்தன், நந்தினி, திரு.திருமதி லக்ஸ்மணன், சிவா, வினோதன், திருக்குமரன் (சிங்கப்பூர்), கம்ஷா (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அனுசா, கீதவாணி, ரமேஷ் ஜசீந்திரன் (தரம் 5B, கொக்குவில் இந்து ஆரம்ப பாடசலை), கனடாவில் வசிப்பவர்களான சர்மிலன், சர்மிளா, சகிதா, சரண்ஜயன், அபிரா, தசான், நிதுசன், சாருசன், திருட்ஷா (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புப் பாட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.04.2008) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*மணியகாரன் ஒழுங்கை,*
*கொக்குவில் கிழக்கு,கொக்குவில்.*
*தொ.பே.இல: 021 4590594* (சி/552599)

தகவல்:
குடும்பத்தினர்.

### செல்லையா சின்னத்துரை

(ஓய்வுபெற்ற முன்னாள் ஊழியர், அரச முதியோர் இல்லம் - கைதடி).



கைதடி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சின்னத்துரை 26.04.2008 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அருமை மகனும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - நாகமுத்து தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும் சிவாஜினி (கொழும்பு), சிவமதி(லண்டன்), சிவதாசன்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கிருஷ்ணகுமாரின்(லண்டன்) மாமனாரும் சுவிஷன், தினுஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான முத்துப்பிள்ளை, விசுவநாதன், வேலாயுதம் மற்றும் சின்னம்மா, செல்லமுத்து, சிதம்பரம் ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான கிஞ்ஞாலி பொன்னையா மற்றும் சின்னம்மா, தவமணி, காலஞ்சென்ற வேலாயுதர் மற்றும் சங்கரப்பிள்ளை, ஆறுமுகம், செல்லத்துரை ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.04.2008) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கைதடி ஊத்தல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'செல்வபவனம்'*
*கைதடி கிழக்கு, கைதடி. 060 2218445* (சி/552604)

தகவல்:
பிள்ளைகள்.

## ஈழத்துச் சிதம்பரத்தில் ஆயிரத்தெட்டுக் கலச சங்காபிஷேகம் இன்று

யாழ்ப்பாணம்,ஏப்.28

சரித்திரப் பிரசித்திபெற்ற ஈழத்துச் சிதம்பரம் - காரைநகர் திண்ணபுரம் அருள்மிகு சிவகாமசுந்தரி சமேத நடராஜப் பெருமான் பிரதிஷ்டை செய்யப்பட்டு நூறு ஆண்டுகள் நிறைவையொட்டி இன்று அங்கு பஞ்ச குண்டபட்ச ஆயிரத்தெட்டு அஷ்டோத்தர சகஸ்ர கலச சங்காபிஷேகம் சிறப்பாக நடைபெறுகிறது.

அஷ்டோத்தர சங்காபிஷேகத்தை முன்னிட்டு நேற்று ஞாயிற்றுக்கிழமையும் முன்தினம் சனிக்கிழமையும் ஆரம்பக் கிரியைகள் நடைபெற்றன.

இன்று காலை ஆறுமணிக்கு ஆரம்பமாகும் விசேட கிரியைகளைத் தொடர்ந்து சுந்தரேசப் பெருமான், சௌந்தராம்பிகை அம்பாள், ஆண்டிக்கேணி ஐயனார் ஆகிய மூர்த்திகளுக்கு அஷ்டோத்தர சத சங்காபிஷேகம் செய்யப்படும்.

தொடர்ந்து சகஸ்ரநாம பஞ்சமுகார்ச்சனையும் நடைபெறும்.

இவ் விழாக் கிரியைகள் யாவும் மூதறிஞர் கலாநிதி சிவஸ்ரீ க.வைத்தீஸ்வரக் குருக்கள், சர்வதேச இந்துமத குருபீடாதிபதி கிரியாகலாப முக்தாமணி ஐ.மகேஸ்வரக் குருக்கள், தமிழகம், சிதம்பரம் நடராஜர் திருக்கோவிலைச் சேர்ந்த சிவஸ்ரீ க.பரமேஸ்வர தீட்சிதர் ஆகியோரின் ஆசியோடு நடைபெறும். (அ)

(சிறப்புமலர் 7ஆம் 8ஆம் பக்கங்களில்)

## பரமானந்தர் ஆச்சிரமத்தில் ஊடகவியலாளர் அஞ்சலி நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஏப்.28

ஊடகவியலாளர் தர்மரட்ணம் சிவராம், செல்வராசா ரஜிவர்மன் ஆகியோரின் நினைவாக வதிரி பரமானந்தர் ஆச்சிரமத்தில் நேற்று அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

ஆச்சிரமத்தில் நேற்று நண்பகல் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மதியபோசனம் வழங்கப்பட்டது. அங்கு தங்கியுள்ள நோயாளியான வயோதிபர் ஒருவருக்கு பண உதவியும் வழங்கப்பட்டது. (1-70)

## முன்பள்ளி மாணவர் விளையாட்டுப்போட்டி

சுழிபுரம்,ஏப்இ-28

சுழிபுரம் பிரதேச சமுர்த்தி வங்கியின் ஏற்பாட்டில் பிரதேச முன்பள்ளி மாணவர்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 2மணிக்கு இடம்பெறவுள்ளது. வழக்கம்பரை மோகன் அரங்கில் இந்தப் போட்டி இடம்பெவுள்ளது.

(1-28)

## உடுவில் பிரதேச செயலகத்தில் ஆள்பதிவுத் திணைக்களக் கிளை

சுன்னாகம்,ஏப்.28

வலிகாமம் தெற்கு உடுவில் பிரதேச செயலகத்தில் ஆள்பதிவு திணைக்களத்தின் கிளை அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

உடுவில் பிரதேச செயலாளர் செல்வி த.மஞ்சுளாதேவி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஆள்பதிவு திணைக்களத்தின் கிளை அலுவலகத்தை யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் திறந்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து நினைவுக்கல்லை பிரதேச செயலாளர் த.மஞ்சுளாதேவி திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக சுன்னாகம் தேசிய சேமிப்பு வங்கி கிளை முகாமையாளர் என்.பகீரதன் கலந்து கொண்டார்.

கட்டட ஒப்பந்தகாரர் எஸ்.மகாதேவன் அரச அதிபரினால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதுடன் ஏனைய கட்டட நிர்மாணிப்பாளர்களும் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (203)

## கடை வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் கடை ஒன்று வாடகைக்கு உண்டு.
*தொடர்பு*
**கந்தையா இராஜன்**
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
தொ.பே: [illegible] (73553)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில் பல வருடங்களாக ஆசிரியராகப் பணியாற்றிய
அமரர்
### சு.கணபதிப்பிள்ளை (சுகனா)
(ஓய்வு பெற்ற அதிபர்)

அவர்களின் மறைவு செய்தி அறிந்து ஆழ்ந்த கவலை அடைந்தோம். அவரின் குடும்பத்தினருக்கு எமது உள்ளம் நெகிழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிராத்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்,
கரவெட்டி.
(B)

## மரண அறிவித்தல்கள்

### நடராஜா இராசல்ட்சுமி



சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா இராசலட்சுமி நேற்று (27.04.2008) ஞாயிற்றுக்கிழமை சிவபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - பூரணம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற நடராஜாவின் அன்பு மனைவியும் புஸ்பராணி, புஸ்பராசா (உரிமையாளர், புகழ் ஸ்ரோர்ஸ், சுன்னாகம்), புனிதராணி (டென்மார்க்), புனிதராசா (லண்டன்), புகழராசா, புகழராணி, ஜெசிலினி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் ரவீந்திரா (நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை, யாழ்ப்பாணம்), அன்னராணி, தனபாலசிங்கம் (டென் மார்க்), பவானி (லண்டன்), பாலசிங்கம்(உரிமையாளர், அபிராமி வேளான் களஞ்சியம், சுன்னாகம், சங்கானை), தமிழ்செல்வன்(சுவிஸ்), ஆகியோரின் அன்பு மாமியாரும் ரதீப் (லண்டன்) ரதீபா (யாழ். பல்கலைக்கழகம்), ராம், சஞ்செயன் (மலேசியா), சயனியா, சகானா, கஜமுகன், குணேஸ், ஷனித், அலன், பிரஜித், சுஜித், அனோஜித், செந் தூரன், தனுசா, சசிதரன், மதீசன், சுசானா, சுசாந் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சங்கானை பிரதான வீதி, கூடத்தம்மன் கோயிலடியிலுள்ள இல்லத்தில் இன்று (28.04.2008) திங்கட்கிழமை பகல் 12 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*பிரதான வீதி,*
*கூடத்தம்மன் கோவிலடி, சங்கானை.* (73561)

தகவல்:
குடும்பத்தினர்.

### சதாசிவம் சிவனடியார் (ஆச்சாரியர்)



திருநெல்வேலி பத்திரகாளி கோவிலடியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சதாசிவம் சிவனடியார் நேற்று (27.04.2008) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அரசடி லேன்,*
*திருநெல்வேலி கிழக்கு.* (73588)

தகவல்:
சி.மகாலச்சுமி (மனைவி)

### மருதப்பா குணநேசன்

*(ஒய்வுபெற்ற தபால் அதிபர்)*



உடுவில் தெற்கை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட மருதப்பா குணநேசன் (26.04.2008) சனிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் உடுவில் தெற்கு மருதப்பா - சின்னம்மா தம்பதிகளின் மகனும், கோப்பாய் தெற்கு ஆறுமுகம் தம்பதிகளின் மருமகனும், பத்மாவதியின் அன்புக் கணவரும், துவாரகா, டக்ணேஷ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுதாகரன், ஜீவிதா ஆகியோரின் மாமனும், காலஞ் சென்றவர்களான சிவராசா, பாலசிங்கம், லில்லிமலர் மற்றும் இரட்ணேஸ்வரி, அல்லிமலர், புனிதவதி, யோகநாதன், பத்மநாதன் ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(29.04.2008) செவ்வாய்க்கிழமை கனடாவிலும் அஞ்சலி நிகழ்வு அன்றைய தினம் அவரது உடுவில் தெற்கு இல்லத்திலும் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உடுவில் தெற்கு,*
*சுன்னாகம்.* (73563)

தகவல்:
பத்மநாதன் (சகோதரன் - ஓய்வு பெற்ற பிரதி அதிபர் யா/அருணோதயக் கல்லூரி)

### சுப்பிரமணியம் சரஸ்வதி



சுன்னாகம், தில்லைகட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சரஸ்வதி நேற்று (27.04.2008) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் - தெய்வானைப்பிள்ளையின் மகளும், கதிரவேலு - தங்கம்மாவின் மருமகளும், சிமெந்து தொழிற்சாலை ஊழியர் சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், சிவக்கொழுந்து, அரியதுரை, காலஞ்சென்ற இரத்தினதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற கந்தையா, பொற்கொடி மற்றும் தேவிகாராணி, சுந்தரமூர்த்தி, தனலஷ்சுமி ஆகியோரின் மைத்துனியும், தர்சினி, தர்மினி (சுவிஸ்), தர்சன், தர்மஜீவன் ஆகியோரின் பெரியம்மாவும், சகிலா, சசிரேகா, காந்தரூபன், கவிதா, சந்திரதாஸ், பவானந்தன் (சுவிஸ்), யசோதா ஆகியோரின் மாமியும், வைஷ்ணவன், திசோணவன், வரூண், சஞ்ஜெய் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(28.04.2008) திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(A)

தகவல்:
சுப்பிரமணியம் (கணவர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கு மக்கள் சிறுபான்மையினர் அல்லர்; தமது பூமியில் அவர்கள் பெரும்பான்மையினரே!

## முந்திய சிங்களத் தலைவர்கள் இதனை ஏற்றனர்

சுயநிர்ணய உரித்து படிப்படியாக வளர்ந்து வந்த விதத்தை ஆராய்வோம். பல விதங்களில் மந்தைகள் போல கட்டுப்பட்டிருந்த உலக நாடுகளின் மக்கள் கடந்த நூற்றாண்டில் எவ்வாறு விடிவை நோக்கிப் பயணித்திருக்கிறார்கள் என்று பார்ப்போம்.

முதன்முதலில் இந்த சுயநிர்ணய உரித்தைப் பற்றிப் பேசியவர் அமெரிக்க ஜனாதிபதி வுட்ரோ வில்சன் (Woodrow Wilson) அவர்களே. முதலாம் உலக மகா யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின் ஐரோப்பாவை எவ்வாறு நாடுகளாகப் பிரிப்பது என்ற கேள்வி எழுந்தது. அவருடைய பிரசித்தி பெற்ற பதினான்கு குறிப்புகள் என்ற பரிந்துரைகளிலேயே இதைக் குறிப்பிட்டிருந்தார். ஒவ்வொரு நாட்டிலும் ஜனநாயக ரீதியலான அரசாங்கங்கள் அமைவேண்டும் என்றும் அந்தந்த நாட்டில் இருக்கும் ஒவ்வோர் இனரீதியான மக்கட் கூட்டத்திற்கும் சுயநிர்ணய உரித்து வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார். அதாவது சுதந்திரமாக வாழ அல்லது தமக்குத் தோதான அரசாங்க முறையை ஏற்படுத்த அவர்களுக்கு உரித்து இருக்கவேண்டும் என்று கூறியிருந்தார். ஆனால் சுயநிர்ணய உரித்து என்ற சொற்றொடர் அவுஸ்திரிய - ஹக்கேரியன், ஒட்டோமன் பேரரசுகளின் கீழ் இருந்த பல நாடுகளின் மக்கள் பற்றியே அப்பொழுது பாவிக்கப்பட்டிருந்து. பேரரசுகள் பல நாடுகளைத் தம் ஆதிபத்தியத்தினுள் வைத்திருந்தன. ஏகாதிபத்தியங்கள் வீழ்ந்ததும் நாடுகள் எவ்வாறு பிரிக்கப்படவேண்டும் என்பதே அப்போதைய பிரச்சினையாக இருந்தது. அதே நேரம் அப்போது பிரித்தானியா போன்ற நாடுகள் இலங்கை போன்ற குடியேற்ற நாடுகளை ஆக்கிரமித்து வைத்துக்கொண்டிருந்தன. எனினும் இந்தச் சொற்றொடர் எமக்குப் பயன் அளிப்பதாக அத்தருணத்தில் பாவிக்கப்படவில்லை. ஆகவே 1919ஆம் ஆண்டில் இச்சொற்றொடர் பாவிக்கப்பட்டபோது குறிப்பிட்ட எல்லா மக்கட் கூட்டத்தினரதும் அபிலாஷைகளைக் குறிப்பிடாது அம்மக்கட் கூட்டத்தினரின் அபிலாஷைகள் வல்லரசுகளின் புவி அரசியல், இராஜதந்திரத் தேவைகளுக்கு ஏற்புடையனவாக அமைந்திருந்தால் மட்டுமே நடைமுறைப்படுத்தக் கூடியனவாக அமைந்தது. எதைக் கூறவருகின்றேன் என்றால் அன்றும் இன்றும் இந்த உலகத்தின் வெவ்வேறு மக்கட் கூட்டத்தினரின் அரசியல் சுயநிர்ணய உரிமைகள் கூட வல்லரசுகளின் வசமே மாட்டிக் கொண்டிருக்கின்றன என்பதையே. அவ்வாறு இருக்கும்போது பிரிந்து செல்வது


## இங்கே சுயநிர்ணய உரிமை அளித்தால் காஷ்மீருக்கும் வழங்கவேண்டும் என்ற அச்சம் இந்தியாவுக்கு

என்பது எந்தளவுக்கு உலக வல்லரசுகளின் தேவைகளுடனும் பார்வைகளுடனுந் தொடர்புபட்டது என்பதை நான் கூறி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை.

1945ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகள் சாசனம் அதன் முதலாம் உறுப்புரையின் இரண்டாம் உப உறுப்புரையில் ஐக்கிய நாடுகளின் குறிக்கோள்களை எடுத்தியம்பும்போது 'சம உரித்துக்கள், மக்கட் கூட்டத்தினரின் சுயநிர்ணய உரித்துக்கள் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் நாடுகளுக்கிடையில் சிநேகபூர்வமான உறவுகளை ஏற்படுத்துவது'' அக்குறிக்கோள்களுள் ஒன்று என்று கூறப்பட்டது.

அதேபோல் 55ஆவது உறுப்புரையிலும் இந்தச் சொற்றொடர் பாவிக்கப்பட்டது. அதாவது மனித உரிமைகளைப் பேணிப் பாதுகாத்து, அடிப்படைச் சுதந்திரங்களை இன, மத, மொழி, பால் சார்ந்த வேற்றுமைகளுக்கு இடமளிக்காது வலியுறுத்தி, சம உரித்துக்கள், மக்கட் கூட்டத்தினரின் சுயநிர்ணய உரித்துக்கள் போன்றவற்றின் அடிப்படையில் நாடுகளுள் சமாதானத்தையுஞ் சினேகபூர்வமான உறவுகளையும் ஏற்படுத்தி, ஸ்திரமான, நலமான சூழலை வருவிக்க ஆவன செய்ய வேண்டும் என்று கூறப்பட்டது.

அதுமட்டுமல்ல, 73ஆவது உறுப்புரையில் ஐக்கிய நாடுகள் சபையைச் சேர்ந்த நாடுகளின் மீது ஒரு கடப்பாடு விதிக்கப்பட்டது. அதாவது சுயாட்சியை வளரச் செய்யவும் அந்தந்த நாட்டின் வெவ்வேறு மக்கட் கூட்டத்தினரின் அரசியல் அபிலாஷைகளைக் கருத்தில் எடுத்து அவர்களுக்கு ஆவன செய்யவும், அவர்களின் சுதந்திரமான அரசியல் நிறுவனங்களை முன்னேற்றி வழிநடத்தவும், ஆவன செய்யவேண்டும் என்று இந்தக் கடப்பாடு அமைந்திருந்தது. ஆனால் அம்மக்கட் கூட்டத்தினரின் அரசியல் அபிலாஷைகளைக் கருத்தில் எடுக்குமாறே கூறப்பட்டிருந்தது. கருத்தில் எடுத்துள்ளோம் என்று கூறிவிட்டுக் கழுத்தை அறுப்பது பல நாடுகளில் அரசாங்கங்களுக்குப் கைவந்த கலையாகிவிட்டது அண்மைக் காலங்களில். உண்மையில் ஒரு வலுவற்ற அல்லது பிழையான சட்டங் கூட ஒரு மனிதாபிமான முள்ள அரசியல் நிர்வாகியின் கையில் மக்களுக்கு நன்மையைக் கொடுக்க வல்லது. வலுவுள்ள அல்லது முறையான நற்சட்டங்கள் கூட ஒரு துவேஷ மனப்பான்மை கொண்ட அரசியல் நிர்வாகியின் கையில் மக்களுக்குத் தீமையை விளைவிக்கக்கூடும் என்பதை நாங் கள் புரிந்துகொள்ள வேண்டும். இன்று 13ஆம், 16ஆம் அரசியல் யாப்புத் திருத்தங்களுக்குப் பிறகு தமிழ்மொழிக்குப் போதிய உரித்துக்கள், சலுகைகள் கொடுக்கப்பட்டுள்ளன.



ஆனால் அவை அரசியல் யாப்பில் அச்சில் உள்ளனவே தவிர நிர்வாகியின் ஆணையில் காணப்படவில்லை. பிரிவினை எண்ணங்கள் ஏற்படுவதற்கு மூலகாரணமே இந்தத் துவேஷ மனப்பான்மைதான் என்று கூறினால் அது மிகை யாகாது.

சட்டம் இருந்தும் இது எம்மைச் சட்டை பண்ணவில்லையானால் சார்ந்திருந்து எதைச் சாதிக்கப்போகின்றோம் என்ற சந்தேகம் மனதில் எழுவதால்தான் பிரிவினை எண்ணம் வெறியாக மாறுகிறது மக்கள் உள்ளங்களில்.

சுயநிர்ணய உரித்தானது மிகத் தெளிவாக ஐக்கிய நாடுகள் ஆவணங்களில் இடம்பெற சில காலம் எடுத்தது. அங்கத்துவ நாடுகளில் வாழ் மக்கட் பிரிவினர்க்கு அத்தகைய சுயநிர்ணய உரித்து இருப்பதாக 1960ஆம் ஆண்டில் வெளிவந்த குடியேற்ற நிலப் பகுதிகள், மக்கட் கூட்டங்களுக்கான சுதந்திரம் வழங்கும் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 1514ஆவது தீர்மானத்தின் இரண்டாவது விளம்பலுரை அறிவித்தது.

(Declaration 2 of Resolution 1514 of the UN General Assembly Declaration on the Granting of Independence to Colonial Territories and Peoples in 1960)

அதன்படி "சகல மக்களுக்குஞ் சுயநிர்ணய உரித்து ஏற்புடைத்தாகும்; அந்த உரித்தின் அடிப்படையின் அவர்களுகுத் தங்கள் அரசியல் நிலை அல்லது அந்தஸ்தை நிர்ணயிக்கவுந் தமது பொருளாதார , சமூக, கலாசார மேம்பாட்டில் ஈடுபடவும் உரிமையுண்டு'' எனப்பட்டது.

இந்தக் காலகட்டத்தில்தான் குடியேற்ற நாடுகளாய் இருந்த பல நாடுகள் குடியேறிய நாடுகளிடம் இருந்து சுதந்திரம் பெறத் தொடங்கியிருந்தன. இந்தியாவும் இலங்கையும் இதற்கு முன்னரே அந்தப் பேற்றினைப் பெற்றிருந்தன.

1966ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையால் சர்வதேச ரீதியிலான கட்டுப்படுத்தும் ஒப்பந்தங்கள் இரண்டு ஏற்கப்பட்டன. பொருளாதார, சமூக, கலாசார உரித்துக்கள் பற்றிய சர்வதேச ஒப்பந்தம் (ICESCR) ஒன்று. அடுத்தது குடியியல், அரசியல் உருத்துக்கள் பற்றிய சர்வதேச ஒப்பந்தம் (ICCPR) இவை 1976ஆம் ஆண்டில் இருந்து நடைமுறைக்கு வந்தன. இவை இரண்டினதும் முதலாவது உறுப்புரை முன்னர் குறிப்பிட்ட 1514ஆவது ஐக்கிய நாடுகள் கூட்டத் தீர்மானத்தில் இரண்டாவது விளம்பலுரையின் உருப்படிவங்களே. இன்று கூட ஐ.சி.சி.பி.ஆர் ஒப்பந்தத்தின் சகல உறுப்புரைகளுக்கும் இலங்கை கட்டுப்பட்டுள்ளதா என்பது சட்டச் சர்ச்சையைக் கிளப்பி உள்ளது.

எனினும் மக்கட் கூட்டம் என்பது குடியேற்ற நாடுகளையே குறிப்பிட்டதாகவும் மக்கட் கூட்டத்தினருக்குச் சுயநிர்ணய உரித்து இருப்பதாகக் கூறும்போது இறைமை கொண்ட நாடொன்றின் மக்களின் ஒரு சாராரை அவ்வுரித்துக்கு உரியவர்களாகச் சட்டங் கருதவில்லை என்றும் வியாக்கியானம் கொடுத்தது இந்தியா. காஷ்மீரை நினைத்து அப்படிக் கூறியிருக்கவேண்டும். ஆனால் இவ்வியாக்கியானத்தை நெதர்லாந்து, பிரான்ஸ், ஜேர்மன் போன்ற நாடுகள் மிகக் கடுமையாக எதிர்த்து விமர்சித்தன. இன்றும் இந்தியாவிற்கு இதே பிரச்சினை இருந்து வருகிறது. இலங்கையில் வடகிழக்குக்குச் சுயநிர்ணய சுதந்திரம் என்றால் இந்தியாவில் காஷ்மீருக்கும் போதிய சுதந்திரம் அளிக்கவேண்டும் என்ற நிர்ப்பந்தம் ஏற்படலாம் என்பதால் வியாக்கியானங்களை விதண்டைகளாக்கியுள்ளனர்.

ஆனால் இந்த இந்தியவியாக்கியானம் ஓரளவிற்கு மற்றைய நாடுகளால் காலக்கிரமத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டதென்றே கூறவேண்டும். ஏனென்றால் 1992 ஆம் ஆண்டு டிசெம்

**பகுதி 02**

**யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தந்தை செல்வாவின் நினைவுநாள் விழாவில், உயர்நீதிமன்ற முன்னாள் நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன், ''விடிவை நோக்கி'' என்ற தலைப்பில் ஆற்றிய நினைவுப் பேருரையின் இரண்டாவது பகுதி இதுவாகும்.**

பர் 18ஆம் திகதி ஐக்கிய நாடுகளால் ஏற்கப்பட்ட தேசிய அல்லது இன, மத, மொழி சார் சிறுபான்மையினர்களின் உரித்துக்கள் பற்றிய விளம்பலில் இத்தகையவர்களுக்கு சுயநிர்ணய உரித்து இருப்பதாகக் கூறவில்லை. Declaration on the Rights of Persons belonging to National or Ethnic, Religious and Linguistic Minorities adopted by the UN General Assembly on 18th December 1992 அதன் 2 ஆம் உறுப்புரையின் முதலாவது உப உறுப்புரை பின்வருமாறு கூறிற்று:

''எவ்வித பாகுபாடுமின்றி, வெளியார் தலையீடுமின்றி சுதந்திரமாகத் தமது கலாசாரத்தை முன்னெடுக்கவும், தமது மதத்தில் நின்று அதைப் பின்பற்றவும், தனித்துவம் பகிரங்கமாகவுந் தமது மொழியைப் பாவிக்கவுந் தேசிய அல்லது இன, மத, மொழிசார் சிறுபான்மையினருக்கு உரித்துண்டு''.

இதன் அடிப்படையில் முன்னய சர்வதேச உடன்பாடுகள் இரண்டிலும் ''மக்கட் கூட்டம்'' என்ற பதம் ஓர் இறைமையுள்ள நாட்டின் சிறுபான்மையினரைக் குறிக்கவில்லை என்று கொள்ள இடம் அளித்தது. மக்கட் கூடடத்திற்குக் கொடுக்கப்பட்ட சுயநிர்ணய உரித்து ஓர் இறைமையுள்ள நாட்டின் சிறுபான்மையினருக்கு வழங்கப்படவில்லை என்றே கொள்ளப்பட்டது. ஆகவே ஒரு நாட்டின் சிறுபான்மையினர் மக்கட் கூட்டம் என்ற சொற்றொடருக்குப் பாத்திரவாதிகள் ஆக வேண்டுமாயின் வேறு சில தகைமைகளை அவர்கள் பெறவேண்டியிருந்தது. உதாரணமாக இரு இனங்களை உள்ளடக்கி ஒரு நாடு உருவாக்கப்பட்டு அதன் காரணத்தால் ஓர் இனம் சிறுபான்மையினராக மாறும் ஒரு சந்தர்ப்பம் எழுந்திருந்தால் அந்தச் சிறுபான்மையினரை வெறும் சிறுபான்மையினர் என்ற வரையறைக்குள் இருந்து வெளிக்கொண்டு வந்து ''மக்கட் கூட்டம்'' என்ற சொற்றோடரின் அர்த்தத்திற்கு பாத்திரமாக்கலாம் எனப்பட்டது.

இலங்கையயைப் பொறுத்த வரையில் இந்த வாதமே தமிழர்களுக்குப் பொருந்துவதாக அமைகின்றது. அதாவது காலாதிகாலமாக புவியியல், நடை, உடை, பாவனை, மதம், மொழி, கலாசாரம் ஆகிய பலவற்றினால் வேறுபட்டு நின்ற சமூகங்கள் இரண்டு, தத்தமது [illegible] வந்த சமூகங்கள் இரண்டு, 1833 ஆம் ஆண்டில் நிர்வாகக் காரணங்களுக்காக ஒரு குடைக்கீழ் ஆங்கிலேயரால் கொண்டு வரப்பட்டன. அதன்பின் சுதந்திரம் கிடைத்த பின்னர் ஜனநாயக அடிப்படையில் என்ற போர்வையின் கீழ் தமிழ்ப் பேசும் மக்களும் அவர்கள் வாழ் பிரதேசங்களும் சிறுபான்மையோர் என்ற முத்திரை குத்தப்பட்டு பாகுபாட்டுக்கு இலக்காக்கப்பட்டனர். உண்மையில் வடக்குக் கிழக்கு மக்கள் சிறுபான்மையினர் அல்லர். அவர்களின் பாரம்பரிய இடங்களின் அவர்கள் பெரும்பான்மையினர். இதை முதன்முதலில் அரசியல் அரங்கில் பகிரங்கமாக வெளியிட்டவர்களுஞ் சிங்கள அரசியல் தலைவர்களே.

சேர் பொன்னம்பலம் அருணாசலத்திற்கு அன்றைய சிங்கள அரசியல் தலைவர்களான சேர் ஜேம்ஸ் பீரிசும், ஈ.ஜே.சமரவிக்கிரமவும் ஓர் உறுதிமொழி அளித்திருந்தனர். அதாவது கொழும்பு நகரத்தில் தமிழருக்கென ஓர் ஆசனம் ஒதுக்கி வைக்கப்படும் என்று அவர்கள் உறுதி அளித்தார்கள். இதன்பொருட்டு இன ரீதியான தேர்தலுக்குப் பதில் இடரீதியான பிராந்தியத் தேர்தல்களை நடத்தத் தமிழ்த் தலைவர்கள் சம்மதிக்க ஆவன செய்யவேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அந்த உறுதிமொழியின் அடிப்படையில் யாழ். தமிழர்களின் பிரதிநிதியாக விருந்த அ.சபாபதி அவர்களுடன் பேசி சம்மதம் பெறப்பட்டது. காரியம் முடிந்தவுடன் சேர் பொன் அருணாசலத்திற்குக் கொடுத்த வாக்குறுதி காற்றில் பறக்க விடப்பட்டது. வாக்குறுதி கொடுத்த காலத்தில் தாம் வகித்த பதவிகள் வேறு, இலங்கையரின் ஏகோபித்த சிபார்சுகளை ஆங்கிலேயர் ஏற்றுக்கொண்டபின் தமது பதவிகள் வேறு என்று கூறி தாம் வகிக்கும் முன்னைய வாக்குறுதிகளை மதிக்கத் தவறினார்கள் இந்தச் சிங்கள அரசியல் தலைவர்கள். ஆனால் அதன்பின் அவர்கள் கூறியவைதான் இங்கு கவனிக்கப்பாலன. தமிழர்களுக்குக் கொழும்பில் விசேட சலுகைகள் எவற்றையும் அளிக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் அவர்களுஞ் சிங்களவர் போல் தமது பாரம்பரிய இடங்களில் பெரும்பான்மையினரே என்றும், தமிழர்களைச் சிறுபான்மையினராகக் கணிக்க வேண்டிய அவசியமில்லை என்றும் கூறினர். இதுபற்றி சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் முன்னைய அதிபர் எம்.வைத்திலிங்கம் அவர்கள் "The Life of Sir Ponnambalam Ramanthan" என்ற தமது நூலின் இரண்டாம் பாகத்தில் பக்கம் 534இல் கூறியதை ஆங்கிலத்தில் அப்படியே உங்களுக்கு அறியத் தருகின்றேன்.

"In saying so Sinhalese leaders gave utterance to a solemn and stupendous truth, long since forgotten, that the Tamils, far from being a minority, have from remote ages been and continue to be a full blooded majority in their ancient homelands, wher their own kings and potentates had held unquestioned sway it was when the evin genius of a foreign conqueror subdued the whole island with its separate and sovereign peoples, pulled down age old national frontiers and for no other reason than his own "supervisory convenience" made the island a single political and administrative unit, that the Tamils became a minority in the conglomerate mass of the island's population.

தமிழ்பேசும் மக்கள் தாங்கள் பாரம்பரியமாக வாழ்ந்த பிரதேசங்களில் பெரும்பான்மையினராகவே தொன்றுதொட்டு இருந்து வந்துள்ளனர் என்ற அடிப்படை உண்மையை சிங்களத் தலைவர்கள் அன்றே கூறியிருந்தனர். ஆகவே முன்னர் தனித்திருந்த மக்கட் கூட்டம் பின்னர் இன்னோரு மக்கட் கூட்டத்துடன் சேர்க்கப்பட்டு சிறுபான்மையினர் ஆக்கப்பட்டு, பின்னர் பாகுபாட்டுக்கும் வேறுபாட்டுக்கும் உள்ளாக்கப்பட்டதால் அவர்கள் பழைய நிலைக்குத் திரும்ப சட்டப்படி ''மக்கட் கூட்ட'' மென்ற விளக்கத்திற்கு , அர்த்தத்திற்கு ஆளாக உரித்துடையவர்கள். இலங்கைத் தமிழர்களும் சட்டப்படி மக்கட் கூட்டமே என்பதை வெளியுலகுக்குத் தெரியப்படுத்த வேண்டிய கடமைப்பாடு எமக்குண்டு. சர்வதேச நோககுக்கு இது முக்கியமானதொன்று. ஓரளவிற்கு இந்த உண்மை வெளிக்கொண்டு வந்தபடியால்தான் ஹிலரி கிளிங்டன் அண்மையில் வன்முறையில் ஈடுபடும் எல்லோர் மீதும் பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தப்படமுடியாது என்ற உண்மையை எடுத்துரைத்தார் என்று நம்புகின்றேன்.

ஆகவே முன்னர் குறிப்பிட்ட 1992ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகள் விளம்பல் ஆவண அடிப்படையில் சர்வதேசச் சட்டத்தின்கீழ் ஒரு நாட்டின் சிறுபான்மையினர் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துக் கொண்டாட முடியாது இருப்பதாகக் கணிக்க வேண்டியிருப்பினும் ஒரு நாட்டின் சிறுபான்மையினர் ''மக்கட் கூட்டம் '' என்ற விவரிப்புக்கு உள்ளடங்கக் கூடிய இயல்புகளைப் பெற்றிருந்தால் அச் சிறுபான்மையினர் தம்மை வேற்றுமைப்படுத்திக் காட்டி சுயநிர்ணய உரித்துக்குத் தாம் உரித்துடையவர்கள் என்று வாதாடமுடியும்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறுவனங்களில் ஊழல்களைத் தவிர்க்க ஒருங்கிணைப்புக் குழுக்கள் செயற்படும்

யாழ்ப்பாணம்,ஏப்.28

இலங்கையில் பொதுச்சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களில் ஊழல் களைத் தவிர்க்கும் நோக்குடன் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கள் செயற்படவுள்ளன.

ஒவ்வொரு திணைக்களத்திலும் ஊழல் களைத் தவிர்த்தல் (CLEAN HANDS) கிளை உருவாக்கப்பட்டு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவுடன் இணையுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து ஒவ்வொரு திணைக்கள அலுவலகங்களிலும் ஊழல்களைத் தவிர்த்தல் கிளைகள் உருவாக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (202-207)

# வெளி மாவட்ட ஆசிரியர்கள் யாழ்ப்பாணத்தில் ஓகஸ்ட் மாதம் வரை கடமையாற்ற அனுமதி

யாழ்ப்பாணம்,ஏப்.28

யாழ்.மாவட்டப் பாடசாலையில் இணைப்புப் பெற்று கடமையாற்றும் பிற மாவட்ட ஆசிரியர்கள் எதிர்வரும் ஓகஸ்ட் 31ஆம் திகதி வரை தொடர்ந்து கடமையாற்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த அனுமதி தொடர்பாக மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் சகல வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவித்துள்ளார்.

இணைப்புப் பெற்ற ஆசிரியர்களுக்கு ஏப்ரல் 20ஆம் திகதி வரை வழங்கப்பட்டிருந்த அனுமதியினை ஓகஸ்ட் 31ஆம் திகதி வரை நீடித்துள்ளதாக அறிவித்துள்ளார். (202-207)

# 2007 ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் குடாநாட்டு மாணவர்களின் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.28

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையின் முடிவுகள் யாழ்.மாவட்டத்தில் வெளியாகின.

குடாநாட்டில் உள்ள - அந்தந்தப் பாடசாலைகளின் - அதிபர்களால் 'உதயனுக்கு' வழங்கப்பட்ட பரீட்சை முடிவுகளில் சில வருமாறு:-

**இமையாணன் அ.த.க. வித்தியாலயம்**

இ.ஜெசீந்தன் - 8ஏபிசி, ஜெ.மயூரன் - 7ஏ2பிசி, தெ.சர்வேந்திரா - 7ஏ2பிசி, ஜீ.அமல்ராஜ் - 7ஏ2பிஎஸ், மோ.நிறோஜன் - 6ஏ4பி, த.கோபாலகிருஷ்ணா - 5ஏ3பி2எஸ், சா.திவ்யா - 3ஏ2பி5சி, த.கரிகாலன் - 2ஏ4பி 3சிஎஸ், சி.மோகனரூபி - 2ஏ3பி3சி2எஸ், பே.சிறீஜீவராணி - ஏ3பி3சி3எஸ், த.சபேஸ் - 4பி2சி4எஸ்.

**அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை**

வி.யாழினி - 6ஏ3பிசி, ஸ்ரீ.ஜனனி - 3ஏபி4சி2எஸ், நா.சுஜிதா - 2ஏ3பி4சிஎஸ், யோ.சுதாஜினி - ஏ6பி2சிஎஸ், த.நாவேந்தன் - 2ஏ2பி3சி2எஸ், யோ.தர்சிகா - ஏ2பி4சி2எஸ், த.சாருதாஸ் - பி7சி.

**உசன் இராமநாதன் ம.வி.**

அ.பிரதீபா - 5ஏ3பிசிஎஸ், சி.சிவானி - 5ஏ5பி, த.நித்தியா - 3ஏ4சிஎஸ், யோ.வேணிகா - 2ஏபி3சி4எஸ், த.சுபாசினி - ஏ3பி2சிஎஸ், செ.கிருபானந்தன் - ஏபி4சி 3எஸ், மா.புகனேந்தினி - ஏ2பி2சி2எஸ், சோ.சுகந்தினி - 2ஏ2பி2சி2எஸ், க.ரேவதி - ஏ3பிசி 4எஸ், கு.சாரதா - ஏ3சி4எஸ்.

**இடைக்காடு மகா வித்தியாலயம்**

ஆர்.கார்த்தீபன் - 9ஏபி, ஏ.செந்தூர்அழகன் - 6ஏ2பிசிஎஸ், எஸ்.சுலக்ஷன் - 5ஏ 2பி3சி, ஜே.ஜெயசுஜீபன் - 4ஏ2பி2சிஎஸ், கே.ஜனா - 4ஏ2பி3சி3எஸ், ஏ.சுயாதிகா - 2ஏ2பி4சி, கே.நிறேஷா - 2ஏ2பி2சி3எஸ், எஸ்.ஸ்ரீசாளினி - 4பி5சிஎஸ், கே.காயத்திரி - 3ஏ6பிஎஸ்.

# பருத்தித்துறை ப.நோ.கூ. சங்கத்தின் சமுர்த்தி நிவாரண விநியோகம் குறித்த முறைப்பாட்டிற்கு அரச அதிபர் நடவடிக்கை

மந்திகை,ஏப்.28

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் சமுர்த்தித் திட்டத்திற்கு வழங்கப்பட்ட உணவுப் பொருள்கள் தரமற்றவை எனக் கிடைத்த முறைப்பாட்டின் பிரகாரம் யாழ். அர சாங்க அதிபரால் நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது.

இத்தகவலை யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் ரீ.மகேஸ்வரகுமார் பருத்தித்துறை சமுர்த்தி மகா சங்க நிறைவேற்றுக் குழுவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பருத்தித்துறை சமுர்த்தி மகா சங்கத்தினர் பருத்தித்துறைப் பிரதேச மக்களுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை விளக்கி யாழ்.அரசாங்க அதிபருக்கு மகாசங்க தலைவர் திருமதி எஸ்.கலாநிதி தலைமையில் நேரில் மகஜரொன்றைச் சமர்ப்பித்திருந்தனர். அம்மகஜருக்குப் பதிலளிக்கும் முகமாகவே யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் இக்கடிதத்தைப் பருத்தித்துறை சமுர்த்தி மகாசங்கத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

சமுர்த்தி நிவாரணத்திற்குரிய முத்திரைகள் இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்பட்டு வருகின்றன. அது நிரந்தரமானதாகும். இது வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள மக்களை இனங்கண்டு வழங்கப்பட்டு வரும் ஒரு நிவாரணமாகும். உலக உணவுத் திட்டத்தினால் வழங்கப்படுகின்ற நிவாரணம் வெளிநாட்டு நிறுவனத்தால் வழங்கப்படும் காரணத்தினால் அது எந்தநேரத்திலும் இடைநிறுத்தப்படலாம். ஒரு குடும்பத்திற்கு இரண்டு விதமான நிவாரணம் வழங்கப்படமுடியாது என அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

சமுர்த்தி முத்திரை நிவாரணத்திற்கு வழங்கப்படும் பெறுமதியை நிதியாக வழங்குவதற்கு அரசாங்க அதிபருடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்கப்படும். சமுர்த்திப் பாதுகாப்பு நன்மைகள் சம்பந்தமாக சமுர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தில் இருந்து 2007ஆம் ஆண்டில் 40,87,260 ரூபா நிதிபெற்று கொடுப்பனவும் மேற்கொள்ளப்பட்டது. தற்பொழுது யாழ்.மாவட்டத்தில் 420,72,250 பெறுமதியுள்ள கொடுப்பனவுகள் மேற்கொள்ளவேண்டியுள்ளது. இந்நிதியை வழங்கும்படி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தைக் கேட்டுள்ளோம். நிதி கிடைத்தவுடன் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும்.

சமுர்த்தி முத்திரைப் பெறுமதி இலங்கை முழுவதிலும் ஒரே பெறுமதியில் வழங்கப்படுவதால் எமது மாவட்டத்திற்கு அதிகரித்த பெறுமதியில் முத்திரை வழங்க ஆவன செய்யும்படி கௌரவ அமைச்சருக்குக் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

சமுர்த்தி திட்டத்தில் வருடாவருடம் வாழ்வாதார கருத்திட்டங்களுக்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. மேலும் சமுர்த்தி வங்கியூடாகவும் சுயதொழில் கருத்திட்டங்களுக்கு 1,00,000 ரூபா வரை கடன் வசதிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சமுர்த்தித் திட்டம் இலங்கை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படுவதால் நடவடிக்கைகளில் மாற்றம் செய்யப்படவேண்டுமெனின் அது அரசாங்கத்தால் தான் மேற்கொள்ளமுடியும் - என்றுள்ளது. (202-218)

# 3 மாதங்களில் 413 நோயாளர்களுக்கு இரவுநேர அம்புலன் சேவை வழங்கப்பட்டது

## இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளை தகவல்

குருநகர்,ஏப்.28

யாழ்.மாநகர எல்லைக்குட்பட்ட பகுதி மற்றும் எல்லைக்கு வெளியேயுள்ள பகுதிகளில் நடத்தப்பட்ட இரவுநேர நோயாளர் அம்புலன்ஸ் வாகன சேவையில் கடந்த மூன்று மாதங்களில் சுமார் 413 நோயாளர்களுக்கு சேவை வழங்கியுள்ளதாக இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ்.கிளை தெரிவித்தது.

ஜனவரி மாதத்தில் 152 நோயாளர்களும், பெப்ரவரி மாதத்தில் 125 நோயாளர்களும், மார்ச் மாதத்தில் 136 நோயளர்களும் இரவுநேர அம்புலன்ஸ் வாகன சேவையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஜனவரி மாதத்தில் 79 நோயாளர்களும், பெப்ரவரி மாதத்தில் 76 நோயாளர்களும் மார்ச் மாதத்தில் 67 நோயாளர்களும்-

யாழ்.மாநகரசபைக்கு வெளியேயுள்ள குடியிருப்புப் பகுதிகளிலிருந்து ஜனவரி மாதத்தில் 73 நோயாளர்களும், பெப்ரவரி மாதத்தில் 49 நோயாளர்களும், மார்ச் மாதத்தில் 69 நோயாளர்களும் இரவுநேர அம்புலன்ஸ் வாகன சேவை மூலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளை தெரிவித்தது. (202-51)




வைத்தீஸ்வராக் கல்லூரியின் இன்ரறக்ட் கழகத்தினரின் சின்னம் சூட்டும் நிகழ்வும் 'துருவன்' சஞ்சிகை வெளியீடும் அண்மையில் நடைபெற்றன. நிகழ்வில் துருவன் சஞ்சிகையின் முதற்பிரதியைப் பாடசாலை அதிபர் எஸ்.வன்னியசிங்கத்திடம் இருந்து யாழ்ப்பாணம் றோட்டறிக் கழகத் தலைவர் க.பாலசுப்பிரமணியம் பெற்றுக்கொள்வதை முதலாவது படத்திலும் இன்ரறக்ட் கழகத் தலைவர் ச.விஜயரூபனுக்கு தலைவருக்கான பட்டியை யாழ்.றோட்டறிக் கழகத் தலைவர் அணிவிப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.




# நாவுக்கரசர் குருபூசை

யாழ்.சைவபரிபாலன சபையின் ஏற்பாட்டில் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9.30 மணிக்கு நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை நடத்தப்படவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை மாணவர்களின் பஞ்சபுராணம் ஓதல், திருநாவுக்கரசு நாயனார் தேவாரம், பேச்சு என்பன இடம்பெறும். (203)

* * *

நவாலி,ஏப்.28

ஆனைக்கோட்டை இந்துசமய விருத்திச் சங்கமும் பாலசுப்பிரமணிய வித்தியாசாலையும் இணைந்து நடத்தும் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை நாளைமறுதினம் புதன்கிழமை காலை 8 மணிக்கு இந்து சமய விருத்திச் சங்கத் தலைவர் ஏ.வி.கணேசமூர்த்தி தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (203-100)

# தேங்காய்ப் பொச்சு, ஊமல் விலை அதிகரிப்பு புகையிலை உலர்த்துவோர் இதனால் சிரமம்

வடமராட்சி,ஏப்.28

தேங்காய்ப் பொச்சு, ஊமல் ஆகியவற்றின் விலை அதிகரிப்பினால் வடமராட்சிப் பகுதியில் புகையிலை உலத்துவோர் பெரிதும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

புகையிலையை பொச்சு, ஊமல் கொண்டு எரித்து புகையூட்டி உலர்த்தவேண்டும். இந்நிலையில் அவற்றின் விலை அதிகரிப்பினால் புகையிலையை உலர்த்துவோர் திண்டாடவேண்டியுள்ளது. முன்னைய காலங்களில் ஒரு லாண்டமாஸ்ரர் பொச்சு, ஊமல்களை இரண்டாயிரம் ரூபாவுக்கு குறைவான விலையில் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது. தற்போது மூவாயிரம் ரூபா தொடக்கம் மூவாயிரத்து 500 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வ[illegible]றது.

தென்மராட்சிப் பகுதியில் பாதுகாப்புப் பிரதேசங்களில் பனை, தென்னந்தோட்டங்கள் அதிகளவு போதியளவு ஊமல், பொச்சுக்களைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையும், எரிபொருள் விலை உயர்வுமே இவற்றிற்கான விலை அதிகரிக்கக்காரணம்எனஇவற்றை எடுத்துவந்து விற்பனை செய்வோர் தெரிவித்தனர். (202-236)

# நூல் கண்காட்சி

வலி.தென்மேற்கு,ஏப்.28

உலக புத்தக தினத்தை முன்னிட்டு வலி.தென்மேற்கு பிரதேச சபை மானிப்பாய் கிராம உப அலுவலகம் ஆனைக்கோட்டையிலுள்ள பொதுநூலகத்தில் இன்று திங்கட்கிழமை முதல் மூன்று தினங்களுக்கு நூல் கண்காட்சியையும் புத்தக விற்பனை கூடத்தையும் நடத்தவுள்ளது.

பிரதேச சபை மானிப்பாய் கிராம உப பணிமனை பொறுப்பதிகாரி ச.சந்திரமவுலி தலைமையில் நடைபெறும் ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.தென்மேற்கு பிரதேச சபையின் செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் கலந்துகொள்வார். (202-135)



வியாபாரிகளுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் விசேட விலைக்கழிவு

பாடசாலை அப்பியாசப் புத்தகங்கள், எழுது கருவிகள், பேப்பர் வகைகள் உட்படப் பல பொருள்கள்

யாழ். மொத்த விலையில் 20 % - 30 % வீதக் கழிவு விலையில் (கொழும்பு விலையில்) பெற்றுக்கொள்ளலாம்.

முழுமையாக விற்றுத் தீர்த்தல்! உடன் விரையுங்கள்....!

"பொஸ்கோ" 3, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'வடக்கின் பெரும் போர்' என வர்ணிக்கப்படும் சென்றல் - சென்.ஜோன்ஸ் அணிகளுக்கிடையிலான 50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் ஆட்டத்தில் வெற்றிபெற்ற யாழ்.மத்திய கல்லூரி அணிக்கான வெற்றிக்கிண்ணத்தை சென்.ஜோன்ஸ் கல்லூரி அதிபர் வண.பிதா ஞானப் பொன்ராசா அணித்தலைவரிடம் வழங்குவதை முதலாவது படத்திலும்- வெற்றிபெற்ற யாழ்.மத்திய கல்லூரி அணியை இரண்டாவது படத்திலும் காணலாம்.
(படங்கள்: நேசன்)

# சென்றல் - சென்.ஜோன்ஸ் விறுவிறுப்பான ஆட்டம்; நிதானமாக ஆடி அசத்தியது கடைசி ஜோடி

## டயான் ஆட்ட நாயகனாகத் தெரிவு

யாழ்ப்பாணம்,ஏப்.28

'வடக்கின் பெரும் போர்' என வர்ணிக்கப்படும் சென்றல் - சென்.ஜோன்ஸ் அணிகளுக்கிடையிலான 50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் ஆட்டம் இறுதிநேரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியது.

26 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் 9ஆவது விக்கெட்டை இழந்த சென்றல் அணியின் இறுதி ஜோடிகள் திறமையாக ஆடி அணியை வெற்றிக்கரை சேர்த்தனர்.

175 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் களம் இறங்கிய சென்றல் அணி மளமள வென விக்கெட்டுகளை இழந்தது.

சென்.ஜோன்ஸ் அணி வீரர்கள் திறமையான களத்தடுப்பு மற்றும் துல்லியமான பந்து வீச்சு காரணமாகவே சென்றலின் விக்கெட்டுகள் அடுத்தடுத்து சரிந்தன.

எனினும்-

9ஆவது விக்கெட்டை இழந்தபோது 149 ஓட்டங்களைப் பெற்ற சென்றல் அணியின் கடைசி ஜோடியாக இணைந்த ஜெனோசன், ஸ்ரீபன்ராஜ் ஆகியோர் நிதானமாக ஆடினர்.

169, 171 ஓட்டங்களை பெற்றபோது ரன் 'அவுட்'' டாக ஆட்டமிழக்கும் நிலை ஏற்பட்டபோதும் நிதானமாக ஆடி 20 ஓட்டங்களைச் சேர்த்து அணியின் வெற்றிக்கு உதவினர்.

இரு ஓவர்கள் எஞ்சியிருந்த நிலையில் வெற்றி இலக்கை எட்டி இருவரும் அசத்தினர். அத்துடன் பரபரப்புடன் அடங்கியது.

பூவா தலையா போட்டதைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது. சென்.ஜோன்ஸ் கல்லூரி துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்தவேளையில் மழை குறுக்கிட்டதைத் தொடர்ந்து ஓவர்கள் 43 ஆகக் குறைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி 43 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 174 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

நருசன் 43, பிரணவன் 24, அச்சுதன் 26, கஜீபன் 20 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்கள்.

டயான் 09 ஓவர்கள் பந்து வீசி 30 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுகளையும் செல்ரன் 09 ஓவர்கள் பந்துவீசி 32 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும் ஜெரிக்துஷான் 08 ஓவர்கள் பந்துவீசி 26ஓட்டங்களுக்கு 02விக்கெட்டுகளையும் கோபிகன் 04 ஓவர்கள் பந்துவீசி 23 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் ஸ்ரீபன்ராஜ் 08 ஓவர்கள் பந்து வீசி 01 ஓட்டமற்ற ஓவர்களுடன் 30 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

175 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய யாழ்.மத்திய கல்லூரி 41.1 ஓவர்களில் 176 ஓட்டங்களை 9 விக்கெட்டுகளை இழந்து பெற்றுக்கொண்டது.

நவநீத் 28, ஜேம்ஸ் ஜக்சன் 26, கோபிகன் 24 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்கள்.

நவநீதன் 08 ஓவர்கள் பந்துவீசி 42 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுகளையும் சுகதாஸ் 08 ஓவர்கள் பந்து வீசி 27 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுகளையும் அச்சுதன், ஹரிவத னன், கஜீபன் முறையே 09, 09, 04 ஓவர்கள் பந்துவீசி 46, 27, 20 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

நான்கு விக்கெட்டுகளையும் 13 ஓட்டங்களையும் பெற்ற யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியைச் சேர்ந்த டயான் ஆட்ட நாயகனாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

இதுவரை இடம்பெற்ற ஆறு ஒருநாள் போட்டிகளில் முதல் 04 போட்டிகளை யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரியும் இறுதி 02 போட்டிகளை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் தனதாக்கிக் கொண்டன. (1-86)

# கே.ஸி.ஸி.ஸி. கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் அரியாலையை வென்றது ஜொனியன்ஸ்

வலி.வடக்கு,ஏப்.28

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் கே.ஸி.ஸி.ஸி. கிண்ணத்திற்காக நடத்திவரும் 30 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய லீக் முறையான கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் ஆட்டம் ஒன்றில் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம் 08 விக்கெட்டினாலும் 03 ஓட்டங்களினாலும் வெற்றிபெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் அரியாலை விளையாட்டுக் கழகமும் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய அரியாலை விளையாட்டுக் கழகம் 24 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 110 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

கிருபா 54, சுரேன் 17 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார்கள்.

அச்சுதன் 06 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 18 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டையும் கிரிசாந் 03 ஓவர்கள் பந்துவீசி 12 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டையும் ரதீஸ் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம் 15.4 ஓவர்களில் 02 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்காக 113 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

ரெட்ணம் 50, ஜனுசன் 26, கிரிசாந் 17 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார்கள்.

குகதாஸ் 04 ஓவர்கள் பந்துவீசி 25 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கௌரி 05 ஓவர்கள் பந்து வீசி 25 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். (1-86)

# இன்றைய ஆட்டங்கள்

மந்திகை,ஏப்.28

இலங்கை வங்கி பருத்தித்துறைக் கிளை தமிழ்ப் புத்தாண்டையொட்டி பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்துடன் இணைந்து நடத்தும் 20/20 துடுப்பாட்டச் சுற்றுப்போட்டி இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும்.

ஆட்டத்தில் வல்வை வி.கவும் தம்புருவளை வி.கவும் மோதுகின்றன. (1-218)

* * *

வலி.வடக்கு,ஏப்.28

தென்மராட்சி சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டி இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் பிரதேச செயலாளர் க.ஸ்ரீனிவாசன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ் கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விளையாட்டாகக் கழகங்களுக்கு இடையே இடம்பெற்ற கரப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகமும் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொள்ளவுள்ளன. (1-86)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# தென்மராட்சி பிரதேச உதைபந்தாட்டம்; மட்டுவில் வளர்மதி கேடயம் சுவீகரித்தது

வலி.வடக்கு,ஏப்.28

தென்மராட்சி, சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே இடம்பெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழகமும் மீசாலை இளம் தென்றல் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

ஆரம்பம் முதலே வளர்மதி விளையாட்டுக் கழகமே மைதானத்தில் தனது ஆதிக்கத்தை செலுத்தி வந்தது. இளம்தென்றல் விளையாட்டுக் கழகம் போட்டியிட்ட போதிலும் கோல்கள் எதனையும் பெறமுடியவில்லை.

ஆட்ட முடிவில் வளர்மதி விளையாட்டுக் கழகம் 4:0 என்ற கோல்கணக்கில் இளம் தென்றல் விளையாட்டுக்கழகத்தை வெற்றிகொண்டு தென்மராட்சி பிரதேச சம்பியனானது. (1-86)

# பெண்கள் உதைபந்தாட்டப் போட்டியில் உடுவில் அணிக்கு வெற்றிக்கிண்ணம்

வலி.வடக்கு,ஏப்.28

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே இடம்பெற்ற பெண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் உடுவில் ஐக்கிய விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் உடுவில் ஐக்கிய விளையாட்டுக் கழகமும் இணுவில் இந்து விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

இந்த ஆட்டத்தில் உடுவில் ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினர் சிறந்த முறையில் விளையாடினார்கள். ஆட்ட முடிவில் உடுவில் ஐக்கிய விளையாட்டுக்கழகம் 5:0 என்ற கோல்கணக்கில் இணுவில் இந்து விளையாட்டுக் கழகத்தை வெற்றிகொண்டு உடுவில் பிரதேச சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. (1-86)



உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே இடம்பெற்ற பெண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இரு அணிகளும் விறுவிறுப்பாக மோதிக்கொள்ளும் காட்சிகள். (86)

# மேசைப்பந்தாட்டம் யூனியன் சம்பியன்

வலி.வடக்கு.28

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற மேசைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் 19 வயதுப் பிரிவில் ஆண்களுக்கான ஆட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி உள்ளக விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் மோதிக்கொண்டன.

யூனியன் கல்லூரி அருணோதயாக் கல்லூரியை வெற்றி கொண்டு வலிகாமம் கல்வி வலய மேசைப்பந்தாட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. (1-86)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# காரைநகர் ஈழத்துச் சிதம்...
## அருள்மிகு சிவகாமசுந்தரி சமே...
## பிரதிஷ்டை செய்யப்பட்ட 100 ஆண்டுகள் நி...

### ஆதீன முதல்வரின் ஆசிச்செய்தி



ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றப்படும் காரைநகர் திண்ணபுரத்து சிவாலயதில் சிவகாமசுந்தரி நடராஜப் பெருமான் பிரதிஷ்டை செய்து நூறு ஆண்டுகள் நிறைவு பெறுவதையொட்டி இன்று சிறப்புற நடைபெறும் சகஸ்ர கலச சங்காபிஷேகப் பெருவிழாவிற்கு ஆசி வழங்குவது பெரும் பேறாகும். நூறு ஆண்டுகளின்நிறைவு என்பது வரலாற்று முக்கியத்துவமான நிகழ்வாகும்.

அதிலும் சிவகாமசுந்தரி சமேத நடராஜப் பெருமானை திண்ணபுரத்தில் பிரதிஷ்டை செய்து நூறு ஆண்டுகள் பூர்த்தியாகியிருப்பதும் இன்றைய தினம் நடைபெறுகின்ற பூஜை வழிபாடு களைக் கண்குளிரக் காண்பதும் புண்ணியம் செய்தார் பெறும்பேறாகும்.

அந்த நன்னாளில் ஈழத்துச் சிதம்பர சிவகமசுந்தரி சமேத நடராஜப் பெருமானின் திவ்விய கடாட்சம் அனைவருக்கும் கிடைக்க அவன்தாள் வணங்கி சகஸ்ர கலச அபிஷேகம் சிறப்புற நடைபெற ஆசி கூறுகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்,**
நல்லை ஆதீனம்.

### தில்லைக் கூத்தனுக்கு நூறாவது வருட அபிஷேகம்



ஆர்த்தெ ழுந்துல கோடுயி ராடிட
நீத்தந் தண்மதி நீள்சடை யாடிட
எத்துந் திண்ண புரத்துநின் றாடிடுங்
கூத்தன் சேவடி கும்பிடு வாமரோ.

ஈழத்துச் சிதம்பரத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் தில்லைக் கூத்தன் நடராஜப் பெருமானின் திருவுருவம் பிரதிஷ்டை செய்யப்பட்டு 100 ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு பஞ்சகுண்ட பட்ச அஷ்டோத்தர சகஸ்ர (1008) கலச சங்காபிஷேசம் இன்று சிறப்புற நடைபெறத் திருவருள் கைகூடிய தையிட்டுப் பேரானந்தம் அடைகின்றேன்.

பஞ்சகிருத்தியத் திருநடனம் புரிகின்ற நடராஜப் பெருமானின் திருவுருவச் சிலை 1901ஆம் ஆண்டு திண்ணபுரம் சிவன் கோயிலில் தென்னாடு சோழபுர குருசாமி சிற்பாசாரியரால் வார்க்கப்பட்டது.

பேய்காசி வமிசத்தவரான மீசைக்காரச் சண்முகம் என்ற அடியவர் தனது கடுக்கண்களை உபகாரம் செய்து இத்திருவுருவத்தை வார்ப்பித்ததாகவும், நிதி இன்மையால் கும்பாபிஷேகம் தடைப்பட்டதாகவும் இதனால் மனம் வெதும்பிய மீசைக்காரச் சண்முகம் ஆறுமாதகாலமாக அங்க விலங்கு பூட்டி நோன்பு நோற்றார் என்றும் அதன் பயனாக இறையருளால் 23.04.1908 இல் சித்திரை மாத திருவோண நன்நாளில் நடராஜப் பெருமானுக்கு கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது என்றும் இவ்வூர்ப் பெரியவர்கள் கூறக் கேட்டிருக்கிறேன்.

நடராஜப் பெருமானுக்கு கும்பாபிஷேகம் நடைபெற்று 100 ஆவது ஆண்டு நிறைவில் இன்று நடைபெறும் பஞ்சகுண்ட பட்ச அஷ்டோத்தர சகஸ்ர (1008) கலச சங்காபிஷேகம் சிறப்பாக நடைபெற எம்பெருமான் திருவருளை வேண்டி நிற்கிறேன்.

**கலாநிதி பண்டிதர் க. வைத்தீசுவரக் குருக்கள்,**
ஈழத்துச் சிதம்பரம், காரைநகர்.

காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் அருள்மிகு சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரர் தேவஸ்தானத்தில் சிவகாமசுந்தரி சமேத நடராஜப் பெருமான் பிரதிஷ்டை செய்யப்பட்டு நூறு ஆண்டுகள் நிறைவில் பஞ்சகுண்ட பட்ச அஷ்டோத்தர சகஸ்ர (1008) கலச சங்காபிஷேகம் இன்று சிறப்பாக நடைபெறுகின்றது.

பஞ்சகிருத்திய திருநடனம் புரிகின்ற நடராசப் பெருமானது திருவுருவம் 1981 ஆம் ஆண்டு திண்ணபுரம் சிவன் கோயிலில் வார்க்கப்பட்டது. விரித்த சடையும் முயலகனை மிதித்து நடனம் புரிகின்ற திருவடியும் பதஞ்சலி, வியாக்கிரதபாதரை இருமருங்கிலும் தொழ வைத்து மிளிர்கின்ற ஐம்பத்தியொரு சுடர்களையும் கொண்ட வட்டவரு திருவாசியுடன் கூடி அண்ட சராசரங்களையும் ஆட வைக்கும் தன்மையுடையதாக

மருவுந் துடியுடன் மன்னிய வீச்சு
மருவிய அப்பும் அனலுடன் கையுங்
கருவின் மிதித்த கமலப் பதமும்
உருவில் சிவாய நமவென வோதே

என்ற திருமந்திர வாக்கின்படி திருவுரு அமைந்து மூல மூர்த்தியின் அருளாட்சியினால்தான் இவ்வளவு சிறப்புடன் அமைந்ததாக இதனை வார்த்த சிற்பி தென்னாடு சோழபுர குருசாமி தெய்வத்தன்மையை வியந்து மெய் சிலிர்க்க கூறியதாக இங்குள்ள பெரியோர் கூறியுள்ளனர். திருவுரு வார்க்கப்பட்டும் ஏழு வருடங்களாக கும்பாபிஷேகம் நடைபெறாது சித்திரைத் திருவோண நட்சத்திர தினமான 23.04.1908இல் ஆதீனகர்த்தா மாசிலாமணி அவர்களின் காலத்தில் நடேசர் திருவுருவம் பிரதிஷ்டை செய்யப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.


சிவபெருமானின் இருபத்தைந்து மூர்த்தங்களுள் நடராசப் பெருமானது மூர்த்தமே சிறப்பானது. ஒரு கணமும் நில்லாது ஆடிக்கொண்டிருக்கும் மூர்த்தம் என்பதால் இந் நடனம் அனவரத தாண்டவம் என்று கூறப் படுகிறது. இந்த ஆனந்தக் கூத்தைக் கண்டு களிக்க மனி தப் பிறவி வேண்டும் என்கிறார் அப்பர் அடிகள்.

குனித்த புருவமுங் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்
மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே.

எம் பெருமானின் ஆனந்தக் கூத்தினால் படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்னும் ஐந்தொழில்களும் நடைபெறுகின்றன. நடராசப் பெருமானது உடுக்கை ஏந்திய கை படைத்தல் தொழிலையும் அஞ்சேல் என்னும் அபயகரம் காத்தல் தொழிலையும் கையில் ஏந்திய தீ அழித்தல் தொழிலையும் ஊன்றிய திருவடி மறைத்தல் தொழிலையும் தூக்கிய பாதம் அருளல் தொழிலையும் உணர்த்தி நிற்கின்றன.

தோற்றம் துடியதனில் தோயும் திதியமைப்பில்
சாற்றிடும் அங்கியிலே சங்காரம் ஊற்றமாய்
ஊன்று மலர் பாதத்தில் உற்ற திரோதம் முத்தி
நான்ற மலர் பதத்தே நாடு.

நடராசப் பெருமானுக்கு நாள்தோறும் அபிஷேகம் செய்யப்படுவதில்லை. சிவபெருமான் அபிஷேகப் பிரியனாக இருப்பினும் நடராசப்பெருமானுக்கு ஓர் ஆண்டில் ஆறு நாள்களில் மட்டுமே அபிஷேகம் நடைபெற்று வருவதை யாவரும் அறிவர்.



எமக்கு ஓராண்டாக அமைவது தேவர்களுக்கு ஒரு நாளாகும். எமக்குரிய உத்தராயணகாலம் தேவர்களுக்கு பகல் பொழுதாகவும் தட்சணாயகாலம் இராப் பொழுதாகவும் விளங்குகிறது. திருக் கோயில்களில் நாள்தோறும்ஆறுகாலப் பூசைகள் நடைபெறுகின்றன. சிறு பொழுதாகிய நாள்தோறும் ஆறு வேளையில் பூசை நடைபெறுவது போல பெரும்பொழுதாகிய வருடத்தில் ஆறுவேளை எம்பெரு மானுக்கு அபிஷேகம் நடைபெறுகிறது.

திருவனந்தல், காலைச்சந்தி, உச்சிகாலம், சாயங்காலம், இரண்டாங்காலம், அர்த்தசாமம் என்பன ஆறுகாலப் பூசை வேளை களாகும். இவற்றுள் முதன் மூன்றும் பகற்காலமாகவும் பின்னை மூன்றும் இராக்காலமாகவும் விளங்குகின்றன. இவற்றிற்கு உட்பட்டே நடராஜப் பெருமானது ஆறு அபிஷேக காலங்கள் அமைகின்றன. மார்கழி, மாசி, சித்திரை, ஆனி, ஆவணி, புரட்டாதி என்னும் மாதங்களே அக்காலங்கள் ஆகும். இந்நிலையில் கூத்தப் பெருமானுக்கு மார்கழி திருவனந்தற்காலமாகவும் மாசி காலை சந்தியாகவும் , சித்திரை உச்சிக் காலமாகவும் ஆனி சாயங்காலமாகவும் , ஆவணி இரண்டாங் காலமாகவும் புரட்டாதி அர்த்த சாமமாகவும் கொள்ளப்படுகின்றது. இவற்றுள் இரண்டாவது காலமும் அர்த்த சாமமும் நெருக்கமாய் அடுத்தடுத்து வருதல் போல

ஆவணி புரட்...
யில் திருவன...
பெருமானுக்...
கின்றன.

கூத்தப் ...
மாதத்தில் வ...
ஒழுங்குமாகு...
பிறவேளைக...
நடைமுறை ...
தவிர்க்கப்பட...
தில் செய்தே...
அமையும்.

நல்லெண்...
சாமிர்தம், ரெ...
ரசம், இளநீர்...
என்னும் இ...
சேகரத்தில் ...
மார்கழி-...
சத்திரங்களி...



குனித்த புருவமும் கோவ்வைச் செவ்வாயிற் குமின் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியிற் பால் வெண்ணீறும்

இனித்தமுடைய வெடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்
மனிதப் பிறவியும் வேண்டுவதே யிந்த மானிலத்தே!


**வெங்கடேஸ்வரா**
125A, 127, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்,
**விசேட காட்சியறை**
127, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**கூத்தப் பிரானை வழிபட்டு உய்தி பெறுவோம்.**
**இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்**
**50, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

**லலிதா புடைவை மாளிகை,**
**இல.56, நவீன சந்தை வீதி, யாழ்ப்பாணம்.**

**சிங்கப்பூர் ஜுவெலரி,**
**93, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

**சீமாட்டி புடவைக் கடல்**
**இல.15, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.**

**சிறிராம் ரேடர்ஸ்,**
**ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

**மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்,**
**ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

**கலைமகள் வர்த்தக நிலையம்,**
**ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

**கணேசன் ஸ்ரோர்ஸ்,**
**201, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.**

**தி.தெய்வேந்திரராசா பல்பொருள் வாணிபம்**
**63 (95), ஆஸ்பத்தரி வீதி, யாழ்ப்பாணம்.**

தரம் ...
இல...
5...
S.T...
ஏகா...
(7...
இரா...
10...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...திதம்பரம் (திண்ணபுரம்)
# ...சமேத நடராஜப் பெருமான்
# ...ள் நிறைவு சிறப்பு மலர் - 28.04.2008







களில் வரும் அபிஷேகம் சதுர்த்தியாகும். இவ்வாறு ஆடல் வல்லானுக்கு ஆண்டொன்றிற்கு ஆறு அபிஷேகங்கள் சிறப்பாக நடைபெறு கின்றன.

இன்று நடைபெறுவது 1008 கலச சங்காபிஷேகமாகும் சங்காபிஷேகம் பெரும்பாலும் அஷ்ட்டோத் தரமாக (108), அஷ்டோத்தர சகஸ்ரமாக (1008) இரு வகைப்படும்.

சங்கினால் செய்யப்படும் அபிஷேகமானது சிறப்பு மிகுந்த பலனைத் தர வல்லது. மண் குடத்திலும் பார்க்க செம்பினால் செய்யப்பட்ட குடம் ஆயிரம் மடங்கு விஷேசமானது. அதனிலும் வெள்ளியால் செய்த குடம் ஆயிரம் மடங்கு விஷேசமானது. அதிலும் பொன்னி னால் செய்த குடம் இரண்டு லட்சம் மடங்கு சிறப்புடை யது. இவைகளிலும் பார்க்க இரத்தினங்களால் அலங் கரிக்கப்பட்ட காண்டாமிருகக் கொம்பினால் அபிஷேகிப்பது இரு மடங்கு விஷேடமானது. இதனைக் காட்டிலும் கடலில் தோன்றி சங்குகோடி மடங்கு விஷேடமானது. சங்காபிஷேகம் என்பது சங்கினால் செய்யப்படும் அபிஷேகம் ஆகும்.

விதிப்படி அமைக்கப்பட்ட யாகசாலையில் விருத்த வியூக கிரம பதக்கிரமங்களின் பிரகாரம் சங்குகளைத் தாபித்து அவற்றில் மந்திரித்த நீருடன் சங்கில் திரவியங்களை கலந்து மேலும் கஸ்தூரி, பச்சைக் கற்பூரம், குங்குமப்பூ, கோரோசனை, புனுகு, லாமிச்சை வேர், ஏலம், பன்னீர், மஞ்சள் முதலிய வாசனைத் திரவியங்களைச் சேர்த்து ஒவ்வொரு சங்கிலும் மாவிலை, தற்பை மலர் வைத்து பூசை செய்து பஞ்ச குண்டமோ நவ குண்டமோ அமைத்து அக்கினி வளர்த்து ஆகுதி செய்து பூர்ணாகுதி தீபாராதனை நிறைவு செய்து கும்ப சங்கு நீரினால் இறைவனுக்கு அபிஷேகம் செய்வர். இதனால் இறைவனுக்கு மூர்த்தி கரமும் சாந் திகளையும் உண்டாக்கும். பக்தர்களுக்கு அருள் கிடைக்கும் என்று ஆகமங்கள் கூறுகின்றன.

ஈழத்துச் சிதம்பரத்தில் ஆலய ஸ்தாபித நூற்றாண்டு நிறைவு சதாபிஷேகம் 17.06.1948 இல் நடைபெற்றது. இன்று சிவகாமசுந்தரி சமேத நட ராஜப் பெருமான் பிரதிஷ்டை செய்யப்பட்ட 100 ஆவது ஆண்டு நிறைவு அஷ்டோத்தர சகஸ்ர (1008) கலச சங்காபிஷேகம் நடைபெறுகிறது. தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ வி. ஈஸ்வரக் குருக்கள் சங்காபிஷக பிரதம குருவாக விளங்க சர்வ போதகம் சிவஸ்ரீ தா. மகா தேவாக் குருக்களும், சர்வசாதகம் சிவஸ்ரீ.நா.பாலசுப்பிரமணியக் குருக்களும், ஏனைய அந்தணச் சிவாசாரியார்கள் பலரும் இணைந்து நூற்றாண்டு நிறைவு சங்காபிஷேகத்தை வெகு சிறப்பாகச் செய்கின்றனர்.

எமது மானிட ஜென்ம வாழ்க்கைக் காலத்தில் கிடைத்தற்கரிய நடராஜப் பெருமான் பிரதிஷ்டை செய்யப்பட்டு 100 ஆண்டுகள் நிறைவில் சித்திரைத் திருவோண நட்சத்திர திதியான இன்றைய நன்னாளில் நாம் எல்லோரும் ஈழத்துச் சிதம்பரத்துக்குச் சென்று சிவகாமசுந்தரி சமேத நடராஜப் பெருமானுக்கும், சுந்தரேஸ்வரப் பெருமான் சௌந்தராம்பிகை அம்பாள் பூரணை புட்கலை சமேத ஆண்டிக்கேணி ஐயனார் ஆகிய மூர்த்திகளுக்கும் நடைபெறும் சங்காபிஷேகத்தைக் கண்குளிர கண்டு தில்லைக் கூத்தன் திருவருள் பெற்று பிறவிப் பிணி நீங்கிப் பெருவாழ்வு பெறுவோமாக.

**ந. கணேசமூர்த்தி.**

ஆவணி புரட்டாதி மாதகால அபிஷேகமும் வருகிறது. ஆறுகாலப் பூசையில் திருவனந்தகாலமும் சாயங்காலமும் சிறப்பாதல் போல கூத்தப் பெருமானுக்கு மார்கழியும் ஆனியும் சிறப்புடையனவாக விளங்குகின்றன.

கூத்தப் பெருமானுக்குச் செய்விக்கின்ற அபிஷே கத்தை அந்தந்த மாதத்தில் வரும் மேலே குறித்த வேளையில் செய்தலே முறையும் ஒழுங்குமாகும். ஆயினும் சில மாதங்களில் மேற் குறித்த நேரந் தவிர்ந்த பிறவேளைகளிலும் நடைமுறையில் நிகழ்வதைக் காண்கின்றோம். இந்த நடைமுறை உண்மை விளக்கத்திற்குப் புறம்பாக இருப்பதால் இது தவிர்க்கப்படவேண்டும். அந்தந்த மாத அபிஷேகத்தை அந்தந்த நேரத்தில் செய்தலே மேன் மையும் மிக்க பலனுக்கும் உரிய வழிபாடாகவும் அமையும்.

நல்லெண்ணெய், மாக்கப்பு, நெல்லி முள்ளி, பஞ் சகவ்வியம், பஞ்சாமிர்தம், நெய், பால், தயிர், தேன், கருப்பஞ்சாறு, பஞ்சபழம், பஞ்சரசம், இளநீர், அன்னம், விபூதி, சந்தனம், கும்பஜலம், அருகிய தீர்த்தம் என்னும் இவைகளால் அபிஷேகம் செய்ய வேண்டும் என்று சித் தாந்த சேகரத்தில் கூறப்பட்டிருக்கிறது.

மார்கழி-திருவாதிரை, சித்திரை- திருவோணம், ஆனி-உத்தரம் நட்சத்திரங்களில் அபிஷேகம் அமைய மாசி, ஆவணி, புரட்டாதி மாதங்

## ஈழத்துச் சிதம்பர குருவின் செய்தி



ஈழத்துச் சிதம்பரம் என்று போற்றப்படுவது காரைநகர் சிவன் கோவில் ஆகும்.

சிதம்பரம் என்னும் சொல்லுக்கு பொருத்தமான ஐம்பத்தொரு சுடர்களைக் கொண்ட திருவாசியுடனும் சிவகாமசுந்தரி சமேத நடராஜப் பெருமான் இங்கு எழுந்தருளியுள்ளார்.

இந்த நடராஜர் முகூர்த்தம் பிரதிஷ்டை செய்து நூறு ஆண்டுகள் நிறைவு அடைகின்றது.

இதனை ஒட்டி பஞ்சகுண்ட பட்ச அஷ்டோத்திர சகஸ்ர (1008) கலச சங்காபிஷேகம் இன்று நடைபெறுகின்றது. இந்த சங்காபிஷேகத்தின் பிரதம குருவாக இருந்து நடத்தும் வாய்ப்பு சிறியோனுக்கு கிடைத்துள்ளது.

இந் நேரத்தில் என்னுடைய பாட்டன் சிவஸ்ரீ கலைதீஸ்வரக் குருக்கள் அவர்களை நான் நினைவு கூறுகின்றேன். அவரே என்னை இந்த நிலைக்கு ஆளாக்கி வைத்தவர்.

இந்த சங்காபிஷேக விழா இனிதே நடந்தேற பூரணை புட்கலை சமேத ஆண்டிக் கேணி ஐயனாரையும் சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானையும் எனது குரு மணியையும் மனதில் இருத்தி நல்லாசி வழங்குகின்றேன்.

**சிவஸ்ரீ.வி. ஈஸ்வரக்குருக்கள்,**
பிரதமகுரு, ஈழத்துச் சிதம்பரம், காரைநகர்.

## புனித பூமியில் திருநடனம் புரியும் நடராஜப் பெருமான்



ஈழமணித் திருநாட்டின் கண்ணே, கலையும் கலாசாரமும் திருவும் திரவியங்களும் அறிவும் ஆன்மீகமும் பொலியும் புனித பூமியாகத் திகழ்வது காரைநகர் எனலாம். இக் காரைநகரின் உயிர் நாடியாக இயங்கிக் கொண்டிருப்பது ''ஞானத்தேன் பொந்தாய்'' விளங்கும் ஈழத்துச் சிதம்பரம் எனும் பதி என்றால் மிகையாகாது.

இப்பதியில் இன்று ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்வ நடைபெற இருப்பது எமக்கெல்லாம் மகிழ்வும் உவகையும் தரும் செய்தியாக இருக்கிறது.

ஆம் இந்தியாவிலே சிதம்பரத்திலே திருநட்னம் புரியும் நடராஜப் பெருமானின் திருவுருவை ஒத்த நடராஜரின் திருச்சிலை இப்பதியில் பிரதிஷ்டை செயயப்பட்டு நூறு ஆண்டுகள் பூர்த்தியாகின்றன.

இதன் பொருட்டு விசேட யாக, பூஜை வழிபாடுகளும் 1008 கலச அபிஷேகமும் நடைபெற இருக்கின்றன. இந்நிகழ்வுகள் யாவும் சிறப்புற நிகழ இறைவனை இறைஞ்சி அனைவருக்கும் அமைதியும் அனைத்து சௌபாக்கியங்களும் கிடைக்க சிவகாமசுந்தரி சமேத நடராஜப் பெருமானை வணங்கிப் பணிகின்றோம்.

**இ.த.ஜெயசீலன்,**
உதவி அரசாங்க அதிபர், காரைநகர்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்,
303, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.

அற்புதா ரேடிங் கொம்பனி,
198, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தரம் 6முதல் A/L வரை வகுப்புகள் நடைபெறுகின்றன.
ஐடியல் அக்கடமி, சண்டிலிப்பாய், காரைநகர், யாழ்ப்பாணம்.

இளவரசி சேலைச் சோலை
57, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

சிவகணேசன் ரெக்ஸ் ரைல்ஸ்
41, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

ஈஸ்வரன் ரேடர்ஸ்,
69, கஸ்தூரியார் வீதி,
யாழப்பாணம்.

S.T. பரமேஸ்வரன்
அன் கொம்பனி,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தேனு களஞ்சியம்,
நவீன சந்தை (உட்புறம்),
திருநெல்வேலி.

திருமுருகன் கொம் நெற்,
259, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்,
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

ஏகாம்பரம் புடைவை மாளிகை,
(72)9, பெரியகடை வீதி
யாழ்ப்பாணம்.

க.கு.கந்தையாபிள்ளை
அன் சண்,
318 (124), ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

எஸ்.எஸ்.என்ட பிரைசஸ்,
220, கெய்சர் வீதி, கொழும்பு-11.
321, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல்ஸ்
105, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2ஆவது பிறந்தநாள் வாழ்த்து

உடுப்பிட்டியில் வசிக்கும்
**சுகிதன்-விஜயமாலா**
தம்பதியரின் செல்வப் புதல்வி
(Lijaniga) **லிஜானிகா** தனது
2ஆவது பிறந்ததினத்தை இன்று
(28.04.2008)திங்கட்கிழமை தனது இல்லத்தில்
வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.அவரை
அப்பா, அம்மா, உற்றார்,உறவினர்கள், நண்பர்கள்
அனைவரும் பிள்ளையார் அருளால் சகல
கலைகளும் பெற்று வழ வாழ்த்துகின்றார்கள்.

இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி. (73383)

தகவல்:
**அப்பா.**




## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து




சேச்லேன், கோப்பாய்தெற்கு
கோப்பாயைச் சேர்ந்த
**ரவிந்திரன்-செல்வரூபா**
தம்பதியினரின் செல்வப் புதல்வி
**அக்ஷயா**
தனது முதலாவது பிறந்தநாளை இன்று
(28.04.2008) திங்கட்கிழமை தனது
இல்லத்தில் வெகு விமரிசையாகக்
கொண்டாடுகிறார். இவரை
அம்மா,அப்பா, மற்றும்
அருணன் மாமா, சந்திரா பெரியம்மா,
வசந்தி பெரியம்மா, சித்திராச் சித்தி,
தயா மாமா, சீலன் மாமா ஆகியோர்
யேசுவின் நாமத்தில் வாழ்த்துகிறார்கள்.
தகவல்:
**அருணன் மாமா** (மேசியா நகைமாடம்).
சேச்லேன்,கோப்பாய் தெற்கு, கோப்பாய். (73386)

## பிறந்தநாள் வாழ்த்து

எமது பாடசாலையில்
அதிபராக
கடமையாற்றி இன்று
(28.04.2008)
மணிவிழாக் காணும்
உயர் திரு.
**செ.செல்வநாயகம்**
அவர்களை அரசகேசரிப்
பிள்ளையாரின்
ஆசீயுடன் நீடூழி வாழ்க
என வாழ்த்துகின்றோம்.



**ஆசிரியர் கழகம்,**
யா/நீர்வேலி சி.சி.தமிழ்க்கலவன் பாடசாலை.
(73528)

## பாரிற்கு இனியவனை பாசத்துடன் பாராட்டுவோம்

யா/குடத்தனை கரையூர் அமி.த.க.
பாடசாலையின் அதிபராகப் பதிவியேற்றுள்ள
நெல்லண்டை, பருத்தித்துறையைச் சேர்ந்த
**தியாக சோமாஸ்கந்தராஜாக்**
**குருக்கள்** B.A., Dip-in-Ed, MA (தமிழ்)
பெற்றோருக்கு நல் மகனாய்
சகோதரர்களுக்கு நல்லண்ணனாய்
நெல்லண்டையாளுக்கு நல்ல சேவகனாய்
மாணவர்களுக்கு நல்லாசிரியனாய்
இருந்தவர் இன்று மாணவ
சமுதாயத்தின் சிறந்த தலைவனாய்
உயர்வு பெற்றமையையிட்டு
மேலும் கல்விச் சமூகத்திற்கே சிறந்த
தலைவனாய் உயர்வு பெற்று
சமூதாயத்தின் சிறந்த சிற்பியாக வளர
என் வாழ்த்துக்கள்.



(73543)

சிவஸ்ரீ
**வே.யோகராசா குருக்கள்**
(சிறியதந்தை),
இலங்கமணன்தோட்ட பிள்ளையார் தேவஸ்தானம்.

'யோகவாசம்',
நெல்லண்டை, பருத்தித்துறை.

## உப்புக் குளத்தில் இளைஞர் சுட்டுக்கொலை

வவுனியா,ஏப்.28

மன்னார், உப்புக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் 4.20 மணியவில் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சடலத்தில் நான்கு துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன என்றும் கொல்லப்பட்டவர் அடையாளம் காணப்படவில்லை எனவும் கூறப்பட்டது. (அ-ப)

## சுதர்ஸன ஹோமம்

யாழ்ப்பாணம்,ஏப்.28

யாழ். வண்ணை வெங்கடேச வரத ராஜப் பெருமாள் ஆலய சுதர்ஸன ஹோமம் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 7 மணி தொடக்கம் விநாயக வழிபாடு, புண்ணியாக வாசனம், யாகபூசை, சுதர்ஸன ஹோமம், விசேடஅபிஷேகம், விசேட பூசை என்பன இடம்பெறும்.

தொடர்ந்து சுதர்ஸன சக்கரமூர்த்தி திருவீதியுலா வருவார். (203)

## கூட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஏப்.28

தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் நாளை செவ்வாய்க் கிழமை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

காலை 9 மணிக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டமும் முற்பகல் 11.30 மணிக்கு பிரதேசவிவசாயக்குழுக் கூட்டமும் நடைபெறுமென பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். (203-207)

* * *

கொடிகாமம் தெற்கு மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு கிராமஅலுவலர்பணிபணையில் நடைபெறவுள்ளது.

இக்கிராம அலுவலர் பிரிவில் மேற்கொள்ளப்படவுள்ள நியாப் நிறுவனத்தின் மீள் எழுச்சித் திட்டம்தொடர்பான செயற்பாடுகளின் முன்ஆயத்தமாக இக்கூட்டம் நடத்தப்படவுள்ளதாக பிரதேச செயலக கிராம அபிவிருத்தி அலுவலர் செ.உமாபாலன் தெரிவித்தார். (202-207)

* * *

ஊர்காவற்றுறைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்நாளைசெவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனி மாநாட்டு மண்புத்தில் நடைபெறவுள்ளது. (203-51)

## தேசிய மரபுரிமைகள் அமைச்சின் அனுசரணையுடன் வடமாகாண கல்வி அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடத்தும் ஆக்கத்திறன் போட்டி-2008

இப் போட்டி **"தேசத்தின் மரபுரிமை சிறுவர்களுக்கானது"** என்னும் கருப்பொருளினை மையமாகக் கொண்டது. இக்கருப்பொருளில், தேசிய மரபுரிமையும், அடையாளத்தையும் வெளிக்காட்டுகின்ற வகையில் சிறுகதை, கவிதை, குறும்படம் என்பன அமைய வேண்டும்.

**போட்டி நிபந்தனைகள்:**

* சிறுகதை: A4 அளவில் தட்டச்சு (கணனியில்) செய்யப்பட்டு 5 பக்கங்களுக்குள் அமையவேண்டும்.
* கவிதை: நூறு வரிகளுக்குள் மேற்படாது தட்டச்சு (கணனியில்) செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
* குறும்படம்: 20-25 நிமிடங்களுக்குள் அமைந்திருக்க வேண்டும் D.V.D.யில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
* ஒருவர் வயது வித்தியாசமின்றி எத்தனை போட்டிகளிலும் பங்கு பற்றலாம்.
* போட்டியாளர்கள் வடமாகாணத்தைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தை பூர்த்தி செய்து தங்கள் பிரதேச மாகாண கலாசார உத்தியோகத்தர்/ பிரதேச செயலாளர் மூலம் தங்கள் சொந்த ஆக்கமென உறுதிப்படுதி 30.07.2008 இற்கு முன் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும். வெற்றி பெறும் படைப்புகளுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

அனுப்ப வேண்டி முகவரி:
**உதவிப்பணிப்பாளர்,**
**பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,**
**கல்வி அமைச்சு, வடமாகாணம்,**
**வரோதயநகர், திருகோணமலை.**
தொடர்புகளுக்கு தொலைபேசி இல: 060 2266990
**செயலாளர்,**
**கல்வி அமைச்சு, வட மாகாணம்.**

### மாதிரி விண்ணப்பப் படிவம்

01. முழுப்பெயர் :
02. புனை பெயர் (இருப்பின்) :
03. பிறந்த திகதி :
04. முகவரி :
05. தொலைபேசி இல :
06. பிரதேச செயலக பிரிவு :
07. மாவட்டம் :
08. பங்குபற்றும் துறை :
09. தலைப்பு :

மேற்படி தலைப்பில் என்னால் சமர்ப்பிக்கப்பட்ட ஆக்கமானது, எனது சொந்த ஆக்கம் என உறுதிப்படுத்துகின்றேன். இவ்வாக்கம் தொடர்பில் நடுவர்களால் எடுக்கப்படும் தீர்மானங்களை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

**விண்ணப்பதாரியின் கையொப்பம்:**

**கலாசார உத்தியோகத்தர்/ பிரதேச செயலாளர் உறுதியுரை:**

மேற்படி விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்பட்ட ஆக்கமானது அவரின் சொந்த ஆக்கம் எனவும் அவர் இப்பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

**உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்:**
**இறப்பர் முத்திரை:** (சி/552547)

## நெஞ்சை விட்டகலாத நினைவஞ்சலி

ஓராண்டு 18ஆம் மாத நினைவலைகள்





**அமரர் சண்முகம் வீரசிங்கம்**
(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், தென்மராட்சி)
திதி:அட்டமி

**அமரர் வீரசிங்கம்**
**சிவரூபன்**
திதி:நவமி

| | | |
|---|---|---|
| 21.01.1945 | வையகத்தே | 27.11.1975 |
| 10.05.2007 | வானகத்தே | 13.11.2006 |

அழகிய உங்கள் சிரிப்பு எங்கே?
அணைத்திட்ட கரங்கள் எங்கே?
கள்ளமில்லா உள்ளங்கள் நெஞ்சை
காலனும் கண்வைத்து விட்டானோ?
சீர்தூக்கி எமை வளர்த்து சிறப்புடனே
வாழ வழி வகுத்த தெய்வங்களே!
தளராத மனம் கொண்ட - எம்
தயாள குணம் ஆனவர்களே- எம்
தாயை தனியாகத் தவிக்க விட்டு
சென்று விட்டீர்களே!
நாள்தோறும் உங்களை எண்ணி
நாமிங்கு வாழுகின்றோம்- எங்கள்
மூச்சு உள்ளவரை- உங்கள்
நினைவுகள் எம்மோடு கலந்திருக்கும்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

உங்கள் நினைவோடு வாழும்:
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

கைதடி தெற்கு,
கைதடி (73523)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
30 * 07 * 1955



மறைவு
10 * 05 * 2007

### திருமதி பன்னீர்செல்வம் புஸ்பராணி

அன்பால் அரவணைத்து ஆசைமொழியூட்டி
மன்னு புகழ் கீர்த்தியுடன் வாழ வைத்த தெய்வமே!
உன் புன்னகைமலர் காணாது எம்மைத்
தவிக்க விட்டுச் சென்றதேனோ?
ஓராண்டுகள் என்ன ஓராயிரம்
ஆண்டுகள் சென்றாலும் - உன்
வதனமுகம் எம் மனதோடு வாழுமம்மா......

உங்கள் பிரிவால் துயருறும்:
**கணவர், பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

பொக்கணைச் சந்தி,
உடுப்பிட்டி. (73548)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# இலங்கைத் தமிழர் விவகாரத்தில் இந்தியாவின் நிலைப்பாடு என்ன?

*''இலங்கைத் தமிழர்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்று எட்டப்படுமானால் அது நிச்சயம் அவர்களின் சுயநிர்ணய உரிமை மற்றும் தாயகக் கோட்பாட்டை அங்கீகரிப்பதை அடிப்படையாகக் கொண்டதாகவே அமைய முடியும். அதைத் தவிர்ந்த வேறு எந்தத் திட்டமும் நிரந்தரமான, நிலைத்து நீடிக்கக் கூடிய தீர்வாக அமையப்போவதில்லை. இதனை இந்தியாவும் உணர்ந்து கொள்ளும் காலம் வெகு தூரத்தில் இல்லை.''*

தமிழகத்தைச் சேர்ந்த பிரபல ஊடகவியலாளரும் 'டெக்கான் குரோனிக்கல்' ஊடக மையத்தின் செய்திப் பிரிவுத் தலைவருமான ஆர். பகவான் சிங் இவ்வாறு கூறியிருக்கின்றார்.

சர்வதேச தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் லண்டன் ஹரோவில் நேற்றுமுன்தினம் நடத்திய கருத்தரங்கில் பகவான் சிங் உட்படப் பல ஊடகவியலாளர்களின் காத்திரமான கருத்துகள் வெளிப்படுத்தப்பட்டன. 'இலங்கைப் பிணக்கின் மத்தியில் ஊடகம்: உண்மை எங்கே?' - என்ற தலைப்பில் இடம்பெற்ற இந்தக் கருத்தரங்கில் இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர்களின் தற்போதைய நெருக்கடி நிலை குறித்தும், ஈழத் தமிழர் பிரச்சினையின் போக்குக் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது. ஈழத் தமிழர்கள் விவகாரத்தில் இந்தியாவின் பங்களிப்புப் பற்றிய விடயமும் விரிவாக அலசப்பட்டது.

*''பதினேழு வருடங்களுக்கு முன்னர் நிகழ்ந்த துன்பியல் நிகழ்வில் சிக்கி நிரந்தரமாகத் தடைப்பட்டுத் தங்கிவிட முடியாது. கடந்தகால அனுபவச் சிந்தனையில் தேங்கி இடக்குப் பட்டு நிற்காமல் எதிர்கால நலன் நோக்கிச் சிந்தித்து ஆக்கபூர்வமாகச் செயற்பட வேண்டிய கட்டம் இந்தியாவிற்கு வந்துவிட்டது. அதற்கான ஆக்கபூர்மான சமிக்ஞைகள் வெளிப்படத் தொடங்கிவிட்டன.''* - என்று இந்தியாவின் மூத்த பத்திரிகையாளரும், 'டெக்கான் குரோனிக்கல்' ஆங்கில நாளிதழின் சென்னைப் பதிப்பின் ஆலோசக ஆசிரியராகப் பொறுப்பேற்கவிருப்பவருமான பகவான் சிங் மேலும் குறிப்பிட்டார்.

*''ராஜீவ் காந்தி கொலை வழக்கில் நளினிக்கு வழங்கப்பட்ட மரணதண்டனைக்குப் பின்னர் ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது. இப்போது ராஜீவின் மகள் பிரியங்கா சிறைச்சாலைக்குச் சென்று நளினியைச் சந்தித்து உரையாடியிருக்கின்றார்.*

*''இதுவரை காலமும் இலங்கை விவகாரத்தில் மத்திய அரசின் கருத்தியல் நிலைப்பாடே மாநில அரசின் நிலைப்பாடுமாகும் என்று தெரிவித்து, இவ்விடயத்தில் ஒதுங்கி நின்று செயற்பட்ட தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி, இப்போது தமிழகத்தின் தனியான கருத்தை வெளிப்படுத்தி, மத்திய அரசை வழிப்படுத்தும் நிலைக்கு மாறிக்கொண்டுள்ளார். இவை புதிய ஆக்கபூர்வமான பிரதிபலிப்புகள்.*

*''கடந்த கால சரித்திரத்தை இறுகப் பற்றிநின்று எதிர்காலச் சுபீட்சத்தைத் தொலைத்து விடமுடியாது என்ற உண்மையை இந்தியர் புரிந்துகொள்ளும் நிலைமை ஏற்பட்டு வருகின்றது.*

*''ஈழத் தமிழர்களின் பிரச்சினைக்கு அவர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் ஒரு தீர்வே - அது மட்டுமே - சாத்தியப்படக் கூடும் என்று நான் நம்புகிறேன். இதனை இந்தியாவும் புரிந்துகொண்டிருக்கும் எனக் கருதுகிறேன்.''* - என்று பகவான் சிங் மேலும் குறிப்பிட்டார்.

இந்த யதார்த்தத்தை இந்தியா உண்மையில் புரிந்துகொண்டதா? அல்லது வெளியில் ஒரு படத்தைக் காட்டிக்கொண்டு, மறைவில் தென்னிலங்கையோடு கைகோர்க்கும் கபடத்திட்டம் ஒன்றைத் தொடர்ந்தும் நிறைவேற்றுகின்றதா? என்ற சந்தேகம் ஈழத் தமிழர்களுக்கும் இலங்கை விவகாரங்களை உன்னிப்பாகக் கவனித்து வரும் நோக்கர்களுக்கும் ஏற்படவே செய்கின்றது.

இலங்கை விவகாரத்தை ஒட்டிய இந்தியாவின் நடத்தையைக் காரசாரமாக விமர்சிக்கும் விதத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அண்மையில் விடுத்த அறிக்கையிலும் -

அதேபோன்று, இந்தியாவின் செயற்போக்கைக் குறைகூறும் விதத்தில் புலிகளின் உத்தியோகபூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' மாத சஞ்சிகையின் ஆசிரிய தலையங்கத்திலும் -

கூறப்பட்ட கருத்துகளும் கூட இவ்வாறு இந்தியாவின் நிலைப்பாடு குறித்த தமிழர்களின் பெரும் சந்தேகத்தைப் பிரதிபலிப்பனவாகவே கொள்ளப்பட வேண்டும்.

உண்மையில் இந்தியா என்னசெய்கின்றது? என்ன செய்யப் போகின்றது?

மீண்டும் புலிகளின் வான்தாக்குதல் பற்றிய செய்திகள் வெளியாகியுள்ளன. திரும்பவும் தனது 'ராடர்' சாதன வசதிகளையும் உதவிகளையும் மேம்படுத்துவதாகக் கூறி ஓடோடி வந்து ஒத்தாசை புரிந்து, இலங்கைப் படைகளின் தமிழர் தாயக ஆக்கிரமிப்புக்கு உதவப் போகின்றதா? அல்லது, இதை ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி இலங்கை அரசு மீது அழுத்தம் பிரயோகித்து இலங்கையை அதன் போர் வெறிப் போக்கிலிருந்து அமைதித் தீர்வுக்கான சமாதான முயற்சிகளின் பக்கம் திருப்பும் எத்தனத்தில் ஈடுபடப்போகின்றதா?

*''இப்பொழுது இந்தியா தனது வெளியுறவுக் கொள்கைப் போக்கில் ஒரு தெளிவான நிலைப்பாட்டை எடுக்க முடியாது இருப்பது - எப்போதும் போல இந்தச் சந்தர்ப்பத்திலும் கூட - உணரப்படுகின்றது. தனது நலன்கள் எவை, அவற்றுக்குத் துணைபோகின்றவர்கள் யார், அல்லது துணைபோகின்ற தரப்புகள் எவை? எத்தரப்பை அரவணைத்துக் கொள்வது - போன்ற விடயங்களில் பல தடுமாற்றங்கள் கொண்டதாக இந்தியா உள்ளது''* - எனப் புலிகளின் மூத்த பிரமுகர் வே. பாலகுமாரன் குறிப்பிடும் கருத்தும் இங்கு ஈண்டு கவனிக்கத்தக்கது.

இலங்கை விவகாரத்தில் சீனாவும், பாகிஸ்தானும் அதிகம் மூக்கை நுழைத்துள்ளன.

இந்தியாவின் நலன்களுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய விதத்தில், அதன் விரோதப் போக்கு நாடுகளான பாகிஸ்தானையும், சீனாவையும், இந்தியாவின் தென்கோடி முனையில் உள்ள இலங்கையில் காலூன்றுவதற்கு வாய்ப்பு, வசதி அளித்து, வெற்றிலை வைத்து நிற்கின்றது கொழும்பு.

இதன் அர்த்த பரிமாணங்களையும் ஆழமான பாதிப்புகளுக்கான அடிப்படைகளையும் புரிந்துகொள்ளாத புதுடில்லி, இரண்டுங்கெட்டான் நிலையில் நடந்து கொள்கின்றது என்பதே தமிழர்களின் ஆதங்கம்.

உண்மையான நண்பர்கள் யார், கபட வேடம் தரித்த எதிரி யார் என்பதை அடையாளம் காணாமல், வெறும் அரசுக் கட்டமைப்புகளின் அடிப்படையில் மட்டும் தீர்மானங்களை எடுத்துக்கொண்டு, தனது நாட்டுக்குரிய தொடர்ச்சியான, விவேகம் மிக்க இராஜதந்திர வெளியுறவுக் கொள்கையை வகுக்க முடியாமல் தடுமாறும் இந்தியா, இன்னும் எவ்வளவு காலத்துக்கு இப்படிச் செய்யப்போகின்றது?

மூத்த பத்திரிகையாளர் பகவான் சிங் குறிப்பிடுவது போல - அல்லது எதிர்பார்ப்பது போல - ஈழத் தமிழர்களின் போராட்டத்தின் நியாயமான பக்கத்தைப் புரிந்துகொண்டு, அதற்கு ஆதரவான நிலைப்பாட்டை இந்தியா வகுத்துக்கொள்ளுமானால் அது இந்தியாவுக்கும் நல்லது. அவலப்பட்ட ஈழத் தமிழர்களுக்கும் நியாயம் கிடைக்கவும் வழி செய்யும்.

பாரதத்தை எப்போதும் தனது நட்புச் சக்தியாகக் கருதும் ஈழத் தமிழினம் இந்தியா நல்லதையே செய்யும் என்று இன்னமும் நம்பிக் காத்திருக்கவே செய்கின்றது.

# முகமாலையில் அரச படைகளே முதலில் ஊடுருவி தாக்கியுள்ளன.

ஊடகவியலாளர் குழுவொன்று இம்மாத ஆரம்பத்தில் முகமாலை பாதுகாப்பு அரண் பகுதிக்கு அழைத்து செல்லப்பட்டது. யாழ்ப்பாணத்தில் அரச படைகளின் கட்டுப்பாட்டிலிருக்கும் பகுதிகளுக்கும் வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டிலிருக்கும் பகுதிகளுக்கும் இடையில் உள்ள பகுதியாகும் இது.

கவச உடைகளையும் தலைக் கவசங்களையும் அணிந்து கொண்டு ஊடகவியலாளர்கள் முகமாலையில் மணல் பாங்கான பிரதேசங்களைப் பார்வையிட்டார்கள். ஜனாதிபதி ராஜபக்ஷவின் பதவிக்



**சண்டே ரைம்ஸ் களநிலை ஆய்வாளர் இக்பால் அத்தாஸின் ஆய்விலிருந்து...**

காலத்தில் குறைந்தது இரண்டு பெரும் போர்கள் இப்பகுதியில் நிகழ்ந்துள்ளன. இராணுவத்தினர் தமது தாய்நாட்டுக்காக இப்பகுதிகளில் இறந்தும் காயப்பட்டும் பெரும் தியாகங்களைச் செய்துள்ளார்கள். ஒன்று 2006ஆம் ஆண்டு ஒக்ரோபரில் மற்றது கடந்த வருடம் நவம்பரில். துப்பாக்கிக் குண்டுகள் வெடிக்காவிட்டாலும் கூட ஆட்டிலரி மற்றும் மோட்டார்க் குண்டு வெடிச் சத்தங்களினால் முகமாலை எப்பொழுதுமே மகிழ்ச்சியளிக்கும் பகுதியல்ல என்பதைப் படையினர் அறிவார்கள். சூரிய வெளிச்சம் பிரகாசமாய் இருக்கும் வேளையில் தங்கள் கைகளில் ஏந்தும் சோற்றுக் கோப்பைகளில் காற்றினால் மண்ணும் புழுதியும் வாரி இறைக்கப்படுவதை அனுபவிப்பவர்கள் அவர்கள். மழை பெய்யும் நேரத்தில் சேறும் சகதியும் ஒரு புறமிருக்க நுளம்புத் தொல்லையை அவர்கள் எதிர்கொள்ப வர்கள்.

### முகமாலையில் ஊடகவியலாளர்

ஊடகவியலாளர்கள் களநிலைகளைப் பார்வையிட்டுத் திரும்பியதன் பின்னர் குடாநாட்டின் இராணுவ அதிகாரிகள் களநிலமைகள் பற்றிய விவரங்களை ஊடகவியலாளர்களுக்கு எடுத்து விளக்கினார்கள். இராணுவம் புதிய களமுனை ஒன்றைத் திறப்பதற்கு ஆயத்தமாகி வருகின்றது என்பது இந்த விவரங்களிலிருந்து தெளிவாகப் புரிந்துகொள்ளக்கூடிய

## சொந்தத் தயாரிப்புக் குண்டுகளை புலிகள் பயன்படுத்தினரா?

தாகவிருந்தது. அவ்வாறான ஒரு புது முனையைத் திறப்பதானால் தெற்குப் பகுதியில் முன்னேறுவதின் மூலமே சாத்தியமாக முடியும். இதைவிட பிறப்க்கமாக யாழ்.குடாநாட்டைப் படையினர் தம் வசம் வைத்துக் கொண்டுள்ளனர். கிளாலி ஏரியானது மேற்குத்திசையி லும் கிழக்கில் கடலும் காணப்படுகின்றன. எனவே முகமாலையைக் கடந்து ஆனையிறவு நோக்கி போவதாயின் இதுவே சரியான பாதை. ஜூலை 2ஆம் திகதி தொடக்கம் படையினர் ஏற்கனவே வன்னியில் போராளிகளுடன் இரு முனைகளில் மோதி வருகின்றனர். கடந்த வருடம் மன்னார் முனையிலும் இவ் வருடம் ஜனவரி 7ஆம் திகதிமுதல் வெலி ஓயாவின் வட கிழக்கு முனைகளிலும் இந்த மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.

மன்னார் களமுனையில் படையினரின் நோக்கங்களில் ஒன்று கடந்த வாரம் நிறைவேறியது. மடுமாதா ஆலயம் அமைந்துள்ள பகுதியை அவர்கள் சென்றடைந்தவுடன் இந்த நோக்கம் நிறைவடைந்தது.

### படை நகர்வுக்கு ஏற்பாடு நடந்தது

ஒழுங்கு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளரின் சுற்றுப் பயணத்திற்குப் பெரும் பரப்புரை வழங்கப்பட்டிருந்தது. தொலைக்காட்சிகளும் பத்திரிகைச் செய்திகளும் முகமாலையிலிருந்து ஒரு பெரும் படைநகர்வு மேற் கொள்ளப்படவிருப்பதை எடுத்துக் காட்டுவதாக இருந்தன. உண்மையில் வடமேற்கிலுள்ள உயர் இராணுவ அதிகாரிகளும் அது பற்றிச் சூசகமாகத் தெரிவித்திருந்தார்கள். ஆங்கில, சிங்கள ஊடகங்களும் அப்படியான ஒரு புதிய படைநகர்வு நடத்தப்படவிருப்பது பற்றி செய்தி வெளியிட்டிருந்தன.

இவ்வாறு நடைபெறவிருக்கும் இராணுவ நடவடிக்கைகள் பற்றிய தகவல்களை வெளியிடுவதானது எதிர்த்தரப்புக்கு இரகசியத் தகவல்களை வெளியிடுவதாகவும் ஆயுதப்படைகளைப் பெரும் அவலத்துக்குள் ஆழ்த்தவதாகவும் அமைந்து விடக் கூடும் என்று எவரும் வாதிடலாம்.

எதுவானாலும் இராணுவத்திலுள்ள ஊடகவியல் நிபுணர்கள் தமது சொந்த எடுப்பில் அல்லது தமது உயர் அதிகாரிகளின் பணிப்பின் பேரில் உடகவியலாளர்களின் பயணம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். உயர் அதிகாரிகள் இவ்வாறான ஒரு வெளிப்பாட்டை- ஒரு செய்தியைத் தெரிவிப்பதற்கு ஆர்வம் கொண்டிருந்திருக்கலாம். எனவே ஊடகவியலாளர்கள் எவரும் தங்களைத் தணிக்கை செய்து கொள்ள வேண்டும் என்று நினைக்கவில்லை. போர் தொடர்பான செய்திகளை வெளியிடும்-வெற்றிகள் பற்றிய புள்ளி விவரங்களை வெளியிடும் பண்டிதர்கள் தாம் என்ன செய்கிறோம் என்பதை அறிந்துதான் செயல்படுகிறார்கள் என்று ஊடகவியலாளர்கள் எண்ணியிருப்பார்கள்.



எதுவானாலும் இராணுவத்தினரின் தன்னலமற்ற சேவைகளை வெளிப்படுத்துவதே ஊடகவியலாளர்களின் களமுனைப் பயணம்.

படையினர் அவலங்களை எதிர்கொண்டு போராடுகிறார்கள். அவர்களுக்குப் புதுவருட விடுமுறையும் கிடையாது.

ஏப்ரல் 5ஆம் திகதி தொடக்கம் மூன்று நாள்களுக்கு ஊடகத்துறையினரின் பயணம் நீடித்தது. 16 நாள்களுக்குப் பிறகு முகமாலையில் பெரும் அனர்த்தம் விளைந்தது. படையினர் மாண்டனர். பலர் பெரும் காயமடைந்தனர். சந்தேகமில்லை தற்காப்பு மற்றும் பாதுகாப்பு அமைப்புகள் பெரும் அதிர்ச்சிக்குள்ளாகின.

### புலிகளே முதலில் தாக்கியதாக அறிக்கை

தமது தற்காப்பு நிலைகளின் மீது புலிப் படையினர் தாக்குதல் நடத்த முனைந்த போது மோதல் மூண்டதாக அதிகார பூர்வமான தகவல்கள் கூறிக்கொண்டன.

''தமிழீழ விடுதலைப் புலிகள் முகமாலை முன்னரங்க தற்காப்பு நிலைகள் மீது தாக்குதல் நடத்தினார்கள். வடக்கில் அரசுக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் ஊடுருவுவதற்கு அவர்கள் எத்தனித்தார்கள்'' என்று பாதுகாப்புத்துறைப் பேச்சாளர் கெஹெலிய ரம்புக்வெல வியாழக்கிழமை நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் கூறினார்.

இராணுவம் தாக்குதலை முறியடித்தது என்று கூறிய அவர், 43 படையினர்

## கொல்லப்பட்டவர்கள்:முரண்பட்ட தகவல்கள்

கொல்லப்பட்டு 35 பேர் காணாமல் போயுள்ளனர் என்றும் தெரிவித்தார். மேலும் 126 பேர் ஆஸ்பத்திரியில் இருக்கிறார்கள். அவர்களில் சிலர் இன்றே வீடுகளுக்குத் திரும்பவும் கூடும் என்றும் அவர் கூறினார்.

கடந்த வெள்ளியன்று இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா இராணுவத் தலைமையகத்தில் ஊடகவியலாளர்களைச் சந்தித்தார். அவர் கூறினார். 47 படையினர் கொல்லப்பட்டார்கள் என்றும் 33பேரைக் காணவில்லை. 300 பேருக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தார்கள் என்றும் இராணுவம் தனது ஆரம்ப தற்காப்பு நிலையிலிருந்து 600 மீற்றர் தூரம் முன்னேறி இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

புலிகளின் தற்காப்பு நிலைகள் இன்னும் 100 மீற்றர் தூரத்திலேயே இருப்பதாகவும் இராணுவம் புலிகளுக்கு எதிரான தாக்குதலைத் தொடர்ந்து முன்னெடுக்கும் என்றும் உறுதியளித்தார்.

புலிகள் இராணுவ நிலைகள் மீது வலிந்து தாக்குதல் மேற்கொண்டார்கள் என்ற அதிகாரபூர்வ அறிவித்தல் உண்மையென்று ஏற்றுக்கொள்வதாக இருந்தாலும் இதில் பல கேள்விகள் எழுகின்றன. முதலாவதாக ஊடகவியலாளர்கள் அழைத்துச் செல்லப்பட்டு சிரேஷ்ட அதிகாரிகளால் மிக முக்கிய தற்காப்பு நிலைகள் என்று கூறி காட்டப்பட்ட நிலைகள் மீது 16 நாள்களில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. 47 படையினர்தான் கொல்லப்பட்டிருந்தாலும் எவ்வாறு இவ்வளவு பாரதூரமான குறைபாடு ஏற்பட நேர்ந்தது?

இவ்வளவு பலம் பொருந்திய தற்காப்பு நிலைகள் மீது எவ்வாறு புலிகளால் தாக்குதல் நடத்திப் பெரும் சேதங்களை ஏற்படுத்த முடிந்துள்ளது?

இரண்டாவதாக ஊடகவியலாளர் அழைத்துச் செல்லப்பட்டு காட்டப்பட்ட விடயங்களின் பரப்புரைகளிலிருந்து விடுதலைப் புலிகள் தகவல்களைப் பெற்றுக் கொண்டார்களா தாக்குதல் நடத்துவதற்கு? இது சரியென்றால், ஊடகவியலாளர்களின் பயணத்தை ஏற்பாடு செய்த இராணுவத்திலுள்ள ஊடகப்பிரிவினர் தேசிய பாதுகாப்புக்குத் திருத்தி அமைக்க முடியாத சேதங்களை ஏற் படுத்தியுள்ளார்கள் என்று எடுத்துக் கொள்ளலாமா? புலிகள் மன்னார் முனையிலிருந்து தமது படையணிகளைப் பின்நகர்த்தி முகமாலைக் களமுனையைச் சில நாள்களுக்குமுன் பலப்படுத்தியிருந்தார்கள் என்ற புலனாய்வுத் தகவல்களுக்கும் இந்தத் தாக்குதலுக்கும் தொடர்பு ஏதும் உண்டா?

### இராணுவமே வலிந்து தாக்குதலை ஆரம்பித்து

வடக்கிலுள்ள அதிகாரிகள் மற்றும் ஆள்கள், இராணுவ தலைமையக உயர் அதிகாரிகள் முதலியோரிடமிருந்து கிடைத்துள்ள செய்திகளின் படி இராணுவம்தான் வலிந்த தாக்குதல் ஒன்றை ஆரம்பித்தது என்று தெரியவருகின்றது. அவர்கள் மிக இரகசியமாகத் தம்மை வெளிப்படுத்திக் கொள்ளாமல் கூறிய தகவல்களின் தொகுப்பு வருமாறு:

புதன்கிழமை அதிகாலை 2.30 மணியளவில் தற்காப்புப் படைகளின் 53 பிரிவினர்கள் தமது நிலையிலிருந்து விடுபட்டு நகரத் தொடங்கினர். பிரிகேடியர் சாந்த சூரிய பண்டார தலை மையிலான ஓர் அணி ஏ-9 பிரதான பாதைக்கருகிலிருந்து முன்னேறியது. பிரிகேடியர் கமால் குணரட்ண தலைமையிலான இன்னொரு அணி பொதுவான இடமொன்றிலிருந்து தெற்கு நோக்கிய திசையில் நாகர்கோயிலுக்கு மேற்காக ஏரியை ஊடறுத்து நகர்ந்தது. சுமார் 8 கி.மீற்றர் தூரம் எல்லாமே தற்காப்பு முனையில் முன்னேற்றகரமாகவே இருந்தது. இந்த நடவடிக்கையில் சுமார் 5,000 படையினர் இருந்தனர். ஒரு சிறு தொகையினரே மோதல் நடவடிக்கையில் ஈடுபடுபவர்களாக இருந்தனர். ஏனையவர்கள் அனுசரணை வழங்குபவர்களாய் இருந்தனர்.

புலிகள் தமது முதல் முன்னரங்க நிலையிலிருந்து பின்வாங்கியது போல் காட்டிக் கொண்டார்கள். பின்னர் அந்தப் பிரதேசத்தை நோக்கிப் படையினர் முன்னேறிய போது புலிகள் திடீர் ஆச்சரியத்தை ஏற்படுத்தினார்கள். பெரும் போர் மூண்டது. பின்னர் படைகள் தமது ஆரம்ப நிலைக்குத் திரும்பினார்கள். புலிகள் சிறு ஆயுதங்களையும் ஆட்லறி, மோட்டார் குண்டுகளையும் பயன்படுத்தியிருந்தார்கள்.

அவர்கள் இருவித சொந்தத் தயாரிப்பு ஷெல் குண்டுகளைப் பாவித்திருக்கிறார்கள் என்று உறுதி செய்யப்படாத தகவல்கள் கூறின. ஒன்றின் பெயர் 'சமாதானம்' மற்றது 'ராகவன்' என்பதாம். முதலாவதில் ''பொஸ் பரஸ்'' என்ற இரசாயனப் பொருளின் தடயம் காணப்பட்டதாகக் கூறப்பட்டது. ஆனால் இந்தக் குண்டுகள் பற்றிய தகவல்கள் எதுவும் நடுநிலையாளர்களால் உறுதிப்படுத்தப்படவில்லை. இவை உண்மையெனில் புலிகள் இரசாயன ஆயுதங்கள் எதையோ உபயோகிக்கிறார்கள் என்பதாகும்.

அன்றைய மோதலில் நூற்றுக்கு மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டுள்ளனர். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக புலிகள் 28 படையினரின் சடலங்களை ஒப்படைத்துள்ளார்கள். மேலும் 348 பேர் காயமுற்றதாகத் தெரிகின்றது. புதன்கிழமையன்று ஸ்ரீ ஜெயவர்த்தனபுர மருத்துவமனையில் 121 படையினர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். 10 பேர் கொழும்பு கண் ஆஸ்பத்திரியிலும் 35 பேர் கொழும்பு தேசிய ஆஸ்பத்திரியிலும் 40 பேர் கொழும்பு இராணுவ ஆஸ்பத்திரியிலும் 128 பேர் பலாலி இராணுவ ஆஸ்பத்திரியிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சியிலிருந்து கிடைத்த செய்திகளின்படி எண்ணிக்கை தெரியாத அளவு படையினர் புலிகளால் சிறைபிடிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

தங்கள் தரப்புச் சேதங்கள் பற்றி புலிகள் மௌனம் சாதித்துள்ளார்கள். அரசின் பாதுகாப்புத்துறை பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல 100 புலிகள் கொல்லப்பட்டிருப்பதாகக் கூறினார். அரசாங்க தரப்பில் ஏனையவர்கள் 300 புலி கொல்லப்பட்டுள்ளனர் என்று கூறிக் கொள்கிறார்கள். (ப)

## நாளை

| | |
|---|---|
| சித்திரை 17 | 29.04.2008 |
| | செவ்வாய்க்கிழமை |
| திதி: நவமி | பி.இ. 03.44வரை |
| நட்சத்திரம் : | திருவோணம் |
| | மு.ப. 08.08 வரை |
| சுபநேரம் : | 10.28 - 11.58 |
| ராகுகாலம் : | 02.58 - 04.28 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மடுப்பிரதேசத்தை இழந்த தோல்வியினால் அப்பாவிகளைப் புலிகள் பலியெடுக்கின்றனர்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அறிக்கையில் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.28

மடுப்பிரதேசத்தை இழந்த தோல்வியினால் விடுலைப்புலித் தலைமை அப்பாவி மக்கள் 24 பேரை பலியெடுத்துள்ளது. மனித நாகரிகமுள்ளவர்கள் எவரும் இது போன்ற அப்பாவி மக்கள் மீதான படுகொலைகளை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அமைச்சர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கொழும்பின் புறநகர்ப் பகுதியான பிலியந்தலையில் வைத்து அப்பாவி குடிமக்கள் 24 பேர் அநியாயமாகப் பலியெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

50 இற்கும் அதிகமான அப்பாவி மக்கள் படுகாயமமைடைந்திருக்கிறார்கள்.

அப்பாவி மக்கள் மீதான இத்தகைய படு கொலைச் சம்பவத்தை புலித் தலைமையின் கோழைத்தனம் என்றே கருதவேண்டியுள்ளது.

யுத்த சேதங்களை விளைவிக்காமல் மடுமாதா தேவாலயத்தை படையினர் மீட்டெடுத்திருப்பது வரவேற்கத் தக்க விடயமாகும். மடுப் பிரதேசத்தை இழந்த தோல் வியினால் மட்டுமே புலித்தலைமை அப்பாவி மக்கள் 24 பேரை பலியெடுத்திருக்கிறது.

புலித்தலை மையினர் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் என்று அனைத்து இன மக்களுக்கும் விரோதமானவர்கள். பொதுவாக மனித குலத்திற்கே எதிரிகள் என்பதை இதுபோன்ற படுகொலைச் சம்பவங்கள் மூலம் தங்களை நிரூபித்து வருகின் றார்கள்.

புலிகளின் பலியெடுப்பு நடவடிக் கைகளை தமிழ் பேசும் மக்கள் ஒரு போதும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. புலித்தலைமையின் பிரச்சினைகள் வேறு, தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகள் வேறு. இந்த இரு வேறு பிரச்சினைக ளையும் சரிவர உணர்ந்துதான் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அரசு தமிழ் பேசும் மக்களுக்கு அரசியல் தீர்வும், புலித் தலைமைக்கு புரிந்த பாஷையில் புலித் தலைமையின் பலாத்காரப் பிடியில் இருக்கும் மக்களை யும் மீட்கும் நடவடிக்கையிலும் ஈடுபட்டு வருகின்றது - என்றுள்ளது.

## புத்தகக் கண்காட்சி நீடிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.28

வலி.தெற்கு பிரதேச சபையால் புத்தக தினத்தையொட்டி உடுவில் பொது நூலகத்தில் நடத்தப்பட்டு வரும் புத்தகக் கண்காட்சி பாடசாலை மாணவர்களின் வேண்டுகோளுக்கு அமைய நாளை செவ்வாய்க்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இக்கண்காட்சியில் யாழ்ப்பாணத்தின் மூன்று பிரபல புத்தக சாலைகள் பங்குபற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(203)


### பட்டமளிப்பு விழா வாழ்த்துக்கள்



Johney Sweenton Anitus
MATHURANAYAGAM
(L.L.B.Colombo)

*இன்று 28.04.2008 கொழும்பு பண்டார நாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் சட்டமாணிப் பட்டத்தைப் பெறும் திரு.ஜொனி சுவீன்ரன் அனிற்றஸ் மதுரநாயகம் அவர்களை மனதார வாழ்த்துவதுடன் இவர் மேலும் பல பட்டங்களைப் பெற்றுப் பல்லாண்டு காலம் நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.*

அன்புடன்
குடும்பத்தினர், உறவுகள்.

அச்சக வீதி,
யாழ்ப்பாணம். (சி/552554)



### மானிப்பாயில்...........

**100% Practical Education!!**
பல புதிய விடயங்களுடன்
30/04/2008 அன்று பிரிவு - 04 ஆரம்பம் !!

**Diploma in Mobile Phone Repairing**

(சகல வகையான கைத்தொலை பேசிகளையும் மிகக் குறுகிய காலத்தில் நீங்களே திருத்துவதற்கான தொழில்சார் கற்கை நெறி)

மேலதிக விபரங்களுக்கு :-
**UNI TECHNOLOGY**
**ICT Education Trainers**
**Manipay** T.P:- 060 - 221 - 6433
(மானிப்பாய் பிரதேச சபைக்கு நேர் எதிரே)



# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

979 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

தனுசு **36 41 47 54**

**25-04-2008**

செல்லுபடியாகும் தொடர் இல. 5650625 - 5665440

ஜக்பொட் பரிசு ரூபா. 2,231,150/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 318,174 | 10/- | 3,181,740/- |
| 2 இலக்கங்கள் | 29,213 | 20/- | 584,260/- |
| 1 இல. + லக்கினம் | 28,823 | 30/- | 864,690/- |
| 2 இல. + லக்கினம் | 2,651 | 100/- | 265,100/- |
| 3 இலக்கங்கள் | 793 | 500/- | 396,500/- |
| 3 இல. + லக்கினம் | 68 | 5,000/- | 340,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 2,231,150/- | - |
| மொத்தம் | | | 6,032,290/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 379,731 | | 7,055,790/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,941,450/-

தொடர் இலக்கம் 4770299 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2008 ஏப்ரல் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கொழும்பு | 5651123-1-19 |
| புத்தளம் | 5658267-9-80 |
| பதுளை | 5653277-8-19 |
| கண்டி | 5660061-7-27 |
| இரத்தினபுரி | 5662016-6-65 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


## சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு சுயதொழில் உதவிகள்

யாழ்ப்பாணம்,ஏப்.28

சுனாமியால் பாதிக்கப்பட்டு தொழில் வாய்ப்பை இழந்தவர்களுக்கு உதவும் ஜீவனோபாய திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ள 40 பயனாளிகளுக்கு சுயதொழில் உதவிகள் சேவாலங்கா நிறுவனத்தால் அண்மையில் வழங்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை நகர்ப் பகுதியில் உள்ள சுப்பர் மடம், கொட்டடி, மயிலிட்டி மற்றும் காங்கேசன்துறை கிராம சேவையாளர் பகுதிகளில் உள்ள 40 பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்கள், கோழிவளர்ப்புக்கான கருவி உபகரணங்களுடன் கோழிகள், கால்நடை வளர்ப்பிற்கான உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

(203-302)

## காரைநகர் பிரதேசத்தில் சட்டவிரோத மின்பாவனை அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.28

காரைநகர் பகுதியில் சட்டவிரோதமாக மின்பாவனை செய்வது அதிகரித்துக் காணப்படுகின்றது.

காரைநகர் எமாந்திபுலம், மல்லிகை உள்ளிட்ட பல கிராமங்களில் இவ்வாறு சட்டவிரோத மின்பாவனை அதிகரித்திருப்பதுடன் மிக நீண்ட தூரத்திற்கு பாதுகாப்பற்ற வயர்கள் மூலம் மின்சாரத்தைப் பெறுவதால் அந்த வீதிகள் ஊடாகச் செல்லும் மக்கள் பெரும் சிரமங்களையும் எதிர்நோக்குகின்றனர்.

சட்ட விரோத மின்பாவனைகளைத் தடுத்து நிறுத்த வேண்டிய அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

(202-250)


### இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 04 - 11 - 1942
உதிர்வு 21 - 04 - 2006

**அமரர் நாகலிங்கம் கணபதிப்பிள்ளை**
*(J.L.S. லொறி உரிமையாளர்)*

நெஞ்சினிலே நினைவு முகம்
நினைவில் தெரிவது ஆசைமுகம்
குடும்பத்தின் உயர்வுக்காக என்றும்
வாழ்ந்தவரே எங்கள் அப்பா!
ஆண்டு இரண்டுகள் சென்றாலும்
மாறவில்லை உங்கள் நினைவுகள்
புத்துயிர் மூலம் ஒரு வாரிசாக
வந்து பிறக்க வேண்டும்

பொன் கந்தையா வீதி,
நெல்லியடி.
குடும்பத்தினர்.
(சி/552595)



### 31ஆம் நாள் நினைவலைகள்



தோற்றம் 13 . 08 . 1936
மறைவு 29 . 03 . 2008

**திருமதி சின்னையா நாகம்மா**

அன்பின் பிறப்பிடமே பண்பின் இலக்கணமே
பாசத்தின் அம்மாவே எமது ஒளி விளக்கே
எம்மை வாழ வைத்த தெய்வமே!
எம் மூச்சு உள்ளவரை
உம் நினைவு எம்மோடு கலந்திருக்கும்

கேயாலடை,
புலோலி மேற்கு,
பருத்தித்துறை. (73372)

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.



### நீங்காத நினைவுகளுடன்....

மூன்றாம் ஆண்டு



**அமரர் இளையதம்பி சுப்பிரமணியம்**
தோற்றம்: 03.02.1911
மறைவு: 01.05.2005
*திதி : 28.04.2008*
*(சித்திரை அபரபக்க அட்டமி)*

ஆறாம் ஆண்டு



**திருமதி கனகாம்பிகை அருணாசலம்**
தோற்றம்: 07.08.1924
மறைவு: 04.05.2002
*திதி : 28.04.2008*
*(சித்திரை அபரபக்க அட்டமி)*

பதினெட்டாம் ஆண்டு



**அமரர் செல்லத்துரை வரதலிங்கம்**
(இளைப்பாறிய அதிபர் யா/வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை)
தோற்றம்: 25.09.1929
மறைவு: 12.05.1990
*திதி : 23.04.2008*
*(சித்திரை அபரபக்க திருதியை)*

**அரியவற்றுளெல்லா மரிதே**
**பெரியாரைப் பேணித் தமராக் கொளல்**
*என்ற வள்ளுவர் வாக்கிற்கமைவாக வாழ்க்கைப் பாதையில் - என்றும்*
*தங்கள் நினைவுப் பதிவுகளின் வழிகாட்டல்கள்*

சுகந்தஞானி
[illegible] வீதி, [illegible]தியடி, யாழ்ப்பாணம்.

நி.அருணாசலம்
117/4, அரசடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(73549)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கான் ஜனாதிபதி கர்சாய் மீது இராணுவ அணிவகுப்பின் போது சூடு!

## அவர் காயங்கள் இன்றித் தப்பினார்; எம்.பிக்கள் இருவர் காயம்

காபூல், ஏப்.28

ஆப்கானின் தலைநகரான காபூலில் நேற்று ஞாயிற்றுக்கிழமை,ஜனாதிபதி ஹமீத் கர்சாய் கலந்து கொண்ட இராணுவ அணிவகுப்பொன்றின் போது, தலிபான் தீவிரவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஜனாதிபதி எதுவித காயங்களுமின்றித் தப்பினார். எனினும் இருவர் கொல்லப்பட்டனர். 11 பேர் காயமடைந்தனர் என ஊடகச் செய்திகள் தெரிவித்துள்ளன.

கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகங்கள் செய்யப்பட்ட சமயம், அவ்விடத்திலிருந்து ஜனாதிபதி ஹமீத் கர்சாய், பாதுகாப்புப்படைகளால் மின்னல் வேகத்தில் அப்பால் அகற்றிக் காப்பாற்றப்பட்டுள்ளார். நூற்றுக் கணக்கானோர் பதறி சிதறி ஓடியுள்ளனர். இதனால் காயமடைந்தவர்களில் இரு எம்.பிக்களுமடங்குவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1992ஆம் ஆண்டு,சோவியத் ஆதரவில் இயங்கிய அரசிடமிருந்து தலைநகரான காபூல் மஜாஹிதின் போராளிகளால் மீட்கப்பட்டதை குறிக்குமுகமாக, இந்த இராணுவ அணிவகுப்பு மத்திய காபூலில் நடத்தப்பட்டுள்ளது. இந்நிகழ்வு ஆப்கான் தேசிய தினக்கொண்டாட்டங்களில் ஒன்றாக கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

தலிபான் தீவிரவாத அமைப்பின் பேச்சாளரொருவர், தமது அமைப்பே, நேற்றைய தாக்குதலை நடத்தியுள்ளது எனத் தெரிவித்துள்ளார். அணி வகுப்புக்கருகில் ஆறு போராளிகள் நிறுத்தப்பட்டிருந்தார்கள். அவர்கள் தற்கொலைத் தாக்குதலுக்கான உள்ளங்கி அணிந்திருந்தார்கள். அத்துடன் துப்பாக்கிகளையும் ஏந்தியிருந்தார்கள் என்றும் அவர் விவரித்துள்ளார்.

(சி)

# மொறோக்கோவில் தீ விபத்து; 55 பேர் உடல் கருகி மரணம்!

காசாபிளாங்கா,ஏப்.28

மொறோக்கோவில் தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் 55 பேர் உடல் கருகி பரிதாபகரமாக உயிரிழந்தனர். இந்த தீ விபத்தில் மேலும் 24 பேர் படுகாயம் அடைந்தனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

மொறோக்கோவின் பொருளாதார தலைநகரமாக விளங்கும் துறைமுக நகரமான காசாபிளாங்காவில் ஏராளமான தொழிற்சாலைகள் உள்ளன. இதில் ஒரு தொழிற்சாலையில் சனிக்கிழமை காலை தீ விபத்து ஏற்பட்டது. அந்தத் தொழிற்சாலையிலிருந்து அவசரமாக வெளியேறுவதற்கான கதவுகள் அடைத்து வைக்கப்பட்டிருந்தமையால் தீ பிடித்தவுடன் உள்ளே இருந்த தொழிலாளர்களால் வெளியேற முடியாத நிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தீ வேகமாகப் பரவியதில் 55 பேர் உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்தனர் என்றும் மேலும் 24 பேர் படுகாயம் அடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர் என்றும் மீட்பு பணிகளில் ஈடுபட்ட அதி காரிகள் தெரிவித்துள்ளார்கள்.

2006ஆம் ஆண்டு மொறோக்கோ நாட்டுச் சிறையில் ஏற்பட்ட தீ விபத்தில் 50 கைதிகள் உயிரிழந்தனர். அதன் பின்னர் நடைபெற்றுள்ள மிக மோசமான தீ விபத்து இதுவாகும்.

இந்தச் சம்பவம் குறித்து தீவிர விசாரணை நடத்தி உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று மொறோகோவின் உள்துறை அமைச்சர் சாகிப் பென் மோசா தெரிவித்துள்ளார்.

(சி)

# வட்ஸன் அதிரடி; ராஜஸ்தான் வெற்றி

பெங்களூர், ஏப்.28

பெங்களூர் றோயல்ஸ் சலஞ்சர்ஸ் அணிக்கு எதிரான ஐ.பி.எல்லின் ருவென்ரி/20 போட்டியில் ஷேன் வட்ஸன் அதிரடியாக விளையாட, ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது.

நேற்றுமுன்தினம் நடந்த இரண்டாவது லீக் போட்டியில் டிராவிட் தலைமையிலான பெங்களூர் றோயல்ஸ் சலஞ்சர்ஸ் அணி, ஷேன் வோர்னை அணித்தலைவராகக் கொண்ட ராஜஸ்தான் றோயல்ஸ் அணியுடன் மோதியது. நாணயச் சுழற்சியில் வென்ற வோர்ன் முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

பெங்களூர் அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி அளித்தது. முதல் ஓவரின் இரண்டாவது பந்தில் டிராவிட் 'டக் அவுட்' ஆனார். இவரை தொடர்ந்து சந்தர்போல் (2), கலிஸ் (11) வரிசையாக ஆட்டமிழக்க, பெங்களூர் அணி திணறத் தொடங்கியது. 3 சிக்ஸர்கள், 6 பவுண்டரிகள் விளாசிய றோஸ் ரெய்லர் 20 பந்துகளில் 44 ஓட்டங்களை எடுத்தார். விராத் கோஹ்லி (13), பௌச்சர் (4) ஆகியோர் இம்முறை சோபிக்கவில்லை. அடுத்து வந்த பிரவீண் குமார், வோர்ன் வீசிய 16ஆவது ஓவரில் அடுத்தடுத்து இரண்டு சிக்ஸர்கள் அடித்து அசத்தினார். இவர் 3 சிக்ஸர்கள், 2 பவுண்டரிகள் உட்பட 34 ஓட்டங்கள் எடுத்தார். பெங்களூர் றோயல்ஸ் சலஞ்சர்ஸ் அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 135 ஓட்டங்களை எடுத்தது. சஹீர்கான் (17), வினய் (1) ஆகியோர் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இதையடுத்து களமிறங்கிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணிக்கு ரவாத் 'டக் அவுட்' ஆகி, ஏமாற்றினார். அடுத்து வந்த யூசுப் பதான் 12 பந்துகளில் 21 ஓட்டங்கள் எடுத்தார். அடுத்து வந்த வட்ஸன், சிமித்துடன் ஜோடி சேர்ந்தார். கலக்கலாக விளையாடிய இந்த ஜோடி அணியை வெற்றிப் பாதையில் அழைத்து சென்றது.

சிறப்பாக விளையாடிய சிமித் 49 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து அரைச்சதம் கடக்கும் வாய்ப்பை ஒரு ஓட்டத்தால் நழுவவிட்டார். வட்ஸன் 61 ஓட்டங்களுடனும் (2 சிக்ஸர்கள், 8 பவுண்டரிகள்), கைவ் 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். ராஜஸ்தான் றோயல்ஸ் 17.1 ஓவரில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 138 ஓட்டங்களை எடுத்து [illegible] (சி)

## அந்தியேட்டி, வீட்டுக்கிருந்திய அழைப்பு



கடந்த 31.03.2008
திங்கட்கிழமை அன்று சிவபத
மடைந்த எமது குடும்ப
ஒளிவிளக்கு

அமரர்

### ஆசை மகாலிங்கம்
(மகான்)


அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (29.04.2008) செவ்வாய்க் கிழமை காலை 8 மணியளவில் வில்லூன்றித் தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருந்தியக் கிரியைகள் 30.04.2008 புதன்கிழமை காலை 11 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் குடும்பசகிதம் வருகைதந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*(தனிப்பட்ட அழைப்பாக இதை ஏற்றுக் கொள்ளவும்)*

*இல. 309 ,அரசடி வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்* (73565) குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### கந்தையா பரமேஸ்வரன்
*(பரமேஸ்வரன் ஸ்ரோஸ் உரிமையாளர், அச்சுவேலி)*



இருபாலை, டச்சு வீதியை பிறப்பிடமாகவும், அச்சுவேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பரமேஸ்வரன் நேற்று (27.04.2008) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னரின் இறுதிக்கிரியை இன்று (28.04.2008) திங்கட்கிழமை பி.ப. 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அச்சுவேலி முழக்கன் இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அச்சுவேலி.*

தகவல்:
மனைவி, பிள்ளைகள்
உறவினர்கள்

## கண்ணீர் அஞ்சலி

அணையா தீபம் எங்கள்

### பூரணம் ஆச்சிக்கு



எமது கண்ணீர் அஞ்சலிகள்
சிவம் குடும்பத்தினர்
*மணியகாரன் லேன்,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்*
(சி/552600)

## கண்ணீர் பூக்கள்



எமது பாடசாலையில் 1970களில் அதிபராகப் பணியாற்றி வைரவிழா கண்டு பாடசாலையின் உயர்வுக்காக தன்னையே அர்ப்பணித்த

### அமரர் சு.கணபதிப்பிள்ளை
(சுகணா - ஓய்வு பெற்ற அதிபர்)

அவர்களின் மறைவு கேட்டு ஆழ்ந்த கவலையடைகிறோம். அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறோம்.

யா/வல்வை சிவகுரு வித்தியாசாலை
பாடசாலைச் சமூகம்,
வல்வெட்டித்துறை.
(C)

## மரண அறிவித்தல்கள்

### பெரியதுரை ஐயர் அமிர்தலிங்க ஐயர்



கெருடாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பெரியதுரைஐயர் அமிர்தலிங்கஐயர் நேற்று (27.04.2008) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் பெரியதுரைஐயர் - கண்மணி அம்மா தம்பதியரின் புதல்வனும் கனகாம்பிகையின் அன்புக் கணவரும் வடிவாம்பிகை, ஸ்ரீ செந்தில்நாதன், அமிர்தாம்பிகை, சிவசண்முகநாதன், சண்முகப்பிரியா ஆகியோரின் அன்புத் தந்தையும் சண்முகசுந்தரம், தொண்டாயுதபாணி தேசிகர் ஆகியோரின் மாமானாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(28.04.2008) திங்கட்கிழமை மு.ப. 11 மணிக்கு நடைபெற்று பூதவுடல் காட்டுப் புலம் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*பாடசாலையடி,*
*கெருடாவில் தெற்கு,*
*தொண்டைமானாறு.* (D)

தகவல்:
சிவசண்முகநாதன்
(மகன்)

### ஆச்சிப்பிள்ளை ஞானசேகரம்

சுன்னாகம் தெற்கை பிறப்பிடமாகக் கொண்ட திருமதி ஆச்சிப்பிள்ளை ஞானசேகரம் நேற்று (27.04.2008) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானசேகரத்தின் அன்பு மனைவியும், இராமலிங்கம் (பிரான்ஸ்), இராமச்செல்வி, குலமணி (கொழும்பு) ஆகியோரின் தாயாரும், பவளராணி (பிரான்ஸ்), சரவணபவானந்தன், பஞ்சலிங்கம் (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஞானசம்பந்தன், கிரிஜா, கங்காசுதன், கவிதா, காலஞ்சென்ற ஹரிகரன் மற்றும் உமாகரன், தாட்சாயினி, அிராம் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அமரர்களான கதிரேசம்பிள்ளை, முத்துக்குமாரு, சுப்பிரமணியம் மற்றும் கனகமணி, சரஸ்வதி, இரத்தினசிங்கம் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (28.04.2008) பிற்பகல் 2 மணிக்கு இடம்பெற்று பூதவுடல் பூவோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாற கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.

*முருகேச பண்டிதர் வீதி,*
*சுன்னாகம் தெற்கு,*
*சுன்னாகம்.* (E)

தகவல்:
குடும்பத்தினர்

### மயில்வாகனம் அரியநாயகம்
(புலோலி ப.நோ.கூ.சங்க முன்னாள் முகாமையாளர்)



மட்டுவிலைப் பிறப்பிடமாகவும், புலோலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் அரியநாயகம் நேற்று (27.04.2008) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், நேசரத்தினம் ஆகியோரின் அன்பு மகனும், யோகேஸ்வரியின் அன்புக் கணவரும் சுஜீவன் (புலோலி ப.நோ.கூ.ச முகாமையாளர்), மேனகா(வட இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அமுதலிங்கம் ( SLTB - கோண்டாவில்), அரியமலர் (வவுனியா), புவனேந்திரம்(கனடா), புவனேஸ்வரி (கனடா), பாலகிருஸ்ணன் (கனடா), பிரபாகரன்(மட்டுவில்), பாஸ்கரன்(வவுனியா) இவர்களின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 28.04.2008 திங்கட்கிழமை அன்று 2.30மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்கான ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்குத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் கூறியதாவது-

இந்த யுத்தம் காரணமாக கடந்த ஏழு மாதங்களில் 700 படையினர் கொல்லப்பட்டும் 2 ஆயிரத்து 500 படையினர் காயமடைந்தும் உள்ளனர் என்று அரசு தெரிவித்துள்ளது.

மாதா மாதம் அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணையை நாடாளுமன்றில் சமர்ப்பித்து அதுமீதான விவாதத்தை ஆரம்பித்துவைத்து உரையாற்றும்போதெல்லாம் பிரதமர் ரட்ணசிறி விக்ரமநாயக்க இந்த விவரங்களைத் தெரிவிப்பார்.

அவ்வாறு கடந்த 7 மாதங்களாக அவர் வெளியிட்ட தகவலின்படியே மேற்குறிப்பிட்ட எண்ணிக்கை பெறப்பட்டுள்ளது. ஆனால், எமக்குக் கிடைத்த தகவலின்படி அந்த எண்ணிக்கை இன்னும் அதிகமாகவே உள்ளது.

தெற்கு மக்களைப் பாதுகாப்பதற்காகவே நாம் சமாதானத்தை கொண்டு வந்தோம் எமது சமாதான முயற்சி பத்து அல்லது பதினைந்து வருடங்கள் சும்மா இழுபறியில் இருந்திருந்தால்கூட நாடு நல்ல நிலையை அடைந்திருக்கும்.

யுத்தம் ஒன்றைச் செய்வதற்கு முன் தெற்கைப் பாதுகாப்பதற்கான திட்டத்தை அரசு வகுக்கவேண்டும் என்று நாம் அரசைக் கேட்டுக்கொள்கின்றோம்.

எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும் பலமிக்க படையினர் இந்த நாட்டுக்குத் தேவை. அந்தப் படையினரை இவ்வாறு அநியாயமாகப் பலிகொடுக்கும் நடவடிக்கையயை அரசு மேற்கொள்ளக்கூடாது.

அதாவது, அரசு தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவே படையினரைப் பாவிக்கின்றது. நாட்டைப் பாதுகாப்பதற்கு அல்ல - என்றார். (அ)

## மணலாறு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விமானப்படையினர் அந்த விமானங்களை எதிர்கொள்ளும் வகையில் யுத்த விமானங்களை அந்தப் பிரதேசத்திற்கு அனுப்பினர். இதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளின் விமானத் தாக்குதல்கள் முறியடிக்கப்பட்டன'' - என்றார்.

விடுதலைப் புலிகள் நடத்திய விமானத் தாக்குதலால் உண்டான பாதிப்பு குறிப்பிடக்கூடிய அளவு இல்லை. படையினர் எவரும் மரணம் அடையவில்லை. ஆனால் இது அவர்கள் காட்டியுள்ள ஒரு சமிக்ஞை. அவர்களிடம் கட்டுக்கோப்பான இராணுவ பலம் இருப்பதாகக் கொள்ள வேண்டும். அரசாங்கப் படைகளின் இராணுவத் தளங்களை இலக்கு வைக்கும் வல்லமையும் நுட்பமும் அவர்களுக்கு உண்டு என்பதனையும் நேற்றைய தாக்குதல் பிரதிபலிக்கிறது - என்று பெயர் குறிப்பிட விரும்பாத பாதுகாப்பு அதிகாரி ஒருவர் கூறியதாக வெளிநாட்டு இணையத் தளம் ஒன்று நேற்றிரவு தெரிவித்தது.

இதேவேளை, விடுதலைப் புலிகள் நடத்திய விமானத் தாக்குதல் குறித்து நேற்று நள்ளிரவு வரை அவர்கள் தரப்பில் இருந்து எவ்வித தகவலும் வெளியாகவில்லை. (அ)


**சான்றிதழ் வழங்கல்**

எமது நிறுவனத்தில் கற்கை நெறியைப் பூர்த்தி செய்து (MCP, MCSE உட்பட) சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளாத மாணவர்கள் 30-04-2008 முன்னர் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்

MCS Supported By UNDP/JRRP


## மருவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதேசம் சமாதான வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சமாதான வலயமாக அறிவிக்கப்பட்டு படையினர் குறித்த பிரதேசத்தை விட்டு வெளியேறிய பின்னர் மீண்டும் விடுதலைப் புலிகள் குறித்த பிரதேசத்தை ஆக்கிரமித்தமை குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு இராணுவ அதிகாரிகள் விளக்கிக் கூறியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்தே ஆயர்கள் விடுத்த வேண்டுகோளை அரசு நிராகரித்துள்ளது எனவும் கூறப்படுகிறது. (சி)

## கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

5 ஆயிரம் மெற்றிக் தொன்களை வவுனியா வில் வைத்து வர்த்தக அமைச்சிடம் கையளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது - என்று அவர் தெரிவித்தார்

தற்சமயம் கிளிநொச்சியில் உள்ள குளங்களில் நீர்மட்டம் உயர்ந்துள்ளதால், விவசாயிகள் சிறுபோக நெற்செய்கையில் ஆர்வம் கொண்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் 10 ஆயிரம் ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது - என்று அரச அதிபர் மேலும் தகவல் தெரிவித்தார். (அ-1)

## வாகனங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த பல வருடங்களில் கிளாலி, முகமாலை, நாகர்கோவில் பகுதிகளிலிருந்து இராணுவம் முன்னேறுவதற்கு பல தடவை முயன்ற போதிலும் பாரிய இழப்புகளுடன் அது பின்வாங்கியுள்ளது.

அப்பகுதியின் புவியியல் அமைப்பு தாக்குதல் மேற்கொண்டவர்களுக்கு எதிராகவுள்ளது. அதேவேளை, பதுங்குகுழிகளை அமைத்து தற்பாதுகாப்பு சமரில் ஈடுபடுபவர்களுக்கு சாதகமாகவுள்ளது என சுயாதீன இராணுவ ஆய்வாளர் ஒருவர் தெரிவிக்கின்றார்.

விடுதலைப் புலிகள் அந்த பகுதியில் பெருமளவு கண்ணிவெடிகளை புதைத்துள்ளதுடன் டாங்கிகளை தகர்ப்பதற்குப் பாரிய நிலக்கண்ணி வெடிகளை பயன்படுத்துகின்றனர். பாரிய குழிகளை வெட்டி இதனை மறைத்துவைத்து விடுகின்றனர். இதனால் இராணுவமும் டாங்கிகளும் அதற்குள் சிக்கிக் கொள்கின்றன என்கிறார் அவர்.

**முன்னாள் இராணுவத் தளபதி**

முன்னாள் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிறிபால வீரசூரிய தெரிவிக்கையில்,

இந்த குறுகிய பகுதியில் தாம் சிக்கிக் கொள்வதைத் தவிர்ப்பதற்காக விடுதலைப் புலிகள் நேரடி மோதலை தவிர்க்கின்றனர். ஆட்லறி, மோட்டார் போன்ற நீண்ட தூர ஆயுதங்களை பயன்படுத்துகின்றனர் என்கிறார்.

விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை மேற்கொள்வது மாத்திரமல்லாமல் துல்லியமாகவும் தாக்குகின்றனர். இதற்கு அவர்களது சிறந்த புலனாய்வும் புவியியல் அமைப்பு குறித்த அறிவும் காரணம் எனவும் அவர் தெரிவிக்கின்றார்.

ஏப்ரல் 2001இல், 2006இல் இராணுவம் முகமாலையிலிருந்து நகர்வை மேற்கொண்டு பாரிய இழப்புகளை சந்தித்து பின்வாங்கியிருந்தது.

கடந்த புதன்கிழமை 53 - 55 படைப் பிரிவுகளின் பாரிய சூட்டாதரவுடன் படைநகர்வை மேற்கொண்ட போதிலும் விடுதலைப் புலிகளின் இரண்டாவது தொகுதி பதுங்குகுழிகளை கைப்பற்றும் முயற்சி தோல்வியடைந்து பாரிய உயிரிழப்புகள் ஏற்பட்டன.

விடுதலைப் புலிகளின் பலத்தை இராணுவம் குறைத்து மதிப்பிட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, எதிர்காலத்தில் மிகவும் கடுமையான மோதல்கள் இடம்பெற லாம் என்கின்றனர் ஆய்வாளர்கள்.(அ-சி)

## இரு தரப்புளும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படையினர் ஆலயப்பகுதியை எம்மிடம் கையளிப்பதாக இருந்தால், அவர்களின் நடமாட்டம் அங்கு இருப்பதை நாங்கள் விரும்பமாட்டோம்.

ஆபத்து இல்லாத பகுதி என தெரிவித்து எம்மிடம் ஒப்படைத்தால் பொறுப்பு எடுப்போம். அதன்பின் அங்கு செய்ய வேண்டிய வேலைகளைச் செய்வோம்.

மடுவில் மாதா சொரூபத்தை கொலுவைப்பது தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் பேசவிருக்கிறோம். அநுராதபுரம், காலி ஆயர்களுடன் நான் அங்கு சென்று புலிகளின் பிரதிநிதிகளைச் சந்திக்க நேரம் ஒதுக்கித்தருமாறு கேட்டுள்ளேன். அதே போன்று இலங்கை ஆயர் மன்றத்தைச் சேர்ந்த மூவர் அரசாங்கத்துடன் பேச இருக்கின்றனர்.

இந்தப் பகுதியை சமாதானப் பிராந்தியமாக்குமாறு இருதரப்பிடம் கோருவோம்.

ஆயுதங்கள், சீருடைகள் போன்றவற்றுடன் ஆலயப் பகுதியில் நடமாடக் கூடாது என்று கோரியுள்ளோம்.

அரசுடனும் விடுதலைப் புலிகளுடனும் பேசிய பின்னர் அடுத்தகட்ட நிலைபாட்டை எடுக்கவிருக்கிறோம். இருதரப்பினரது உறுதிப்பாடு கிடைத்தால் மட்டுமே திருச்சொரூபத்தை தேவாலயத்துக்குக் கொண்டு வரமுடியும்.

இருதரப்பின் உறுதிப்பாடும் கிடைக்காமல் திருச்சொரூபத்தைக் கொண்டுவந்தால், மீண்டும் ஆபத்தை எதிர்கொண்டு இடம்பெயர நேரிடும்.

படையினரிடம் இருந்து ஆலயத்தை பொறுப்பேற்பது ஒன்று. மாதாசிலையைக் கொண்டு வருவது என்பது இன்னோர் விடயம்.

இருதரப்பினரதும் ஒத்துழைப்புடன் தான் மாதாசிலையைக் கொண்டு வரமுடியும். மடுதேவாலயத்தில் படையினர் நிலை கொண்டுள்ளனர். மாதா சொரூபம் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ளது. எனவே இருதரப்புக்களின் ஒத்துழைப்புக் கிடைத்தால்தான் சொரூபத்தை மீண்டும் மடுவுக்கு கொண்டு வரமுடியும் - என்றார் மன்னார் ஆயர். (அ-1)

## கட்டுநாயக்கா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி திடீர் சுற்றிவளைப்புத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என அவர் மேலும் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் கூறிவை வருமாறு.

கட்டுநாயக்கா விமான நிலையத்தை அண்டிய பிரதேசத்தில் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து தொடர்ந்து தேடுதல் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தபோதிலும் நேற்றைய தினம் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பில் மேலதிக பொலிஸாரும் படையினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இத்தேடுதல் நடவடிக்கைக்காக கட்டுநாயக்கா விமானப் படைத்தளத்தின் விமானப்படையினர் பலரும் இணைத்துக்கொள்ளப்பட்டனர். சுற்றிவளைப்புத் தேடுதலின் போது கைதுசெய்யபப்ட்டவர்கள் பொலிஸாரின் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்கா பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களிடம் பொலிஸார் உரிய விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர் சந்தேகமற்றவர்கள் விடுவிக்கப்படுவர். ஏனையோர் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

ஈரான் ஜனாதிபதியின் இலங்கை விஜயத்தை முன்னிட்டு கட்டுநாயக்கா விமான நிலையம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் மேலதிக பாதுகாப்புக் களுக்காக மேலதிக பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் நியமிக்கப்பட்டுள்ளனர் - என்றார்.

## முகமாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரு சமர்கள் மிகவும் உக்கிரமாக நடைபெற்றன. இதில் பெருமளவிலான படையினர் உயிர்களையும், தமது உடல் உறுப்புக்களையும் இழந்திருந்தனர்.

2006ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதமும், கடந்த வருடம் நவம்பர் மாதமும் இம் மோதல்கள் நடைபெற்றிருந்தன. கடந்த மாதம் இப்பகுதிக்குச் சென்றிருந்த ஊடகவியலாளர்களிடம் இராணுவம் தென் முனையில் மேலும் ஒரு களமுனையை திறக்க உள்ளது என அதிகாரிகள் தெரிவித்திருந்தனர். ஆனால், கடந்த புதன்கிழமை விடுதலைப் புலிகள் படையினரின் நிலைகளைத் தாக்கினர் எனவும், இம் மோதல்களில் 43 படையினர் கொல்லப்பட்டனர் எனவும் இதில் 33 போர் காணாமல் போய் உள்ளனர் எனவும், 126 பேர் காயமடைந்துள்ளனர் எனவும் பாதுகாப்புத்துறை பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல அடுத்த நாள் தெரிவித்திருந்தார்.

எனினும், கடந்த வெள்ளிக்கிழமை தெரிவுசெய்யப்பட்ட ஊடகவியலாளர்களை இராணுவத் தலைமையகத்திற்கு அழைத்த இராணுவத்தளபதி சரத் பொன்சேகா, 47 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் எனவும், 33 பேர் காணாமல் போயுள்ளனர் எனவும் 300 பேருக்கு அதிகமானோர் காயமடைந்துள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார். அத்துடன் இராணுவம் 600 மீற்றர் தூரம் முன்னேறியுள்ளதாகவும் தெரிவித்திருந்தார்.

அவரது தகவல்களின்படி விடுதலைப் புலிகளின் பாதுகாப்பு அரண்களில் இருந்து 100 மீற்றர் தொலைவிலேயே இராணுவம் தற்போது நிலைகொண்டிருக்கவேண்டும். படையினரின் தகவல்களின் படி விடுதலைப் புலிகள் வலிந்த தாக்குதலை நடத்தியிருந்தால் அது தொடர்பில் பல கேள்விகள் எழ வாய்ப்புள்ளது.

இம்மோதல்களில் நூற்றுக்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டதுடன், 348 பேர் காயமடைந்துள்ளனர். 121 பேர் ஜெயவர்த்தனபுர மருத்துவமனையிலும், 10 பேர் கண் மருத்துவமனையிலும், 35 பேர் தேசிய மருத்துவமனையிலும், 40 பேர் கொழும்பு இராணுவ மருத்துவமனையிலும், 128 பேர் மருத்துவமனையிலும் சேர்க்கப்பட்டுள்ளனர். எனினும் கிளிநொச்சியிலிருந்து கிடைத்த தகவல்களின் படி படையினர் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வெள்ளிக்கிழமை 53ஆவது படையணியின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் சமந்தா சூரிய பண்டார அப்பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். தற்போது அவர் அமெரிக்காவில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் பாதுகாப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

53ஆவது படையணியின் கட்டளை அதிகாரியாக 55ஆவது படையணியின் கட்டளை. அதிகாரி பிரிகேடியர் கமல் குணரட்ண நியமிக்கப்பட்டுள்ளார். அவரது இடத்திற்கு பிரிகேடியர் பிரசன்ன சில்வா நியமிக்கப்பட்டுள்ளார் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


**CHEMISTRY**
(GROUP Class)
ORGANIC
ஆரம்பம் : செவ்வாய் 6.30 AM
DIAS Bse (Hons)
College of Chemistry
பழம் Rd., கந்தர்மடம்



**Spoken English by BRITTO**

புதிய பிரிவு 01.05.2008
காலை 7.00-8.00

**சிங்களம்**
Prof. லீலாகிருஷ்ணன்
புதிய பிரிவுகள் Sat - Sun 7.00-8.00
Tues - Fri 5.00-6.00
ஆரம்பம் 02.05.2008 மாலை 5.00

**வணிகக்கல்வி**
நந்திஸ் B,B,A(Hons) Dip in Ed.
2009 A/L
part - II
ஆரம்பம்: 30.04.2008 மாலை 4.30
(தனிப்பாட அனுமதி வழங்கப்படும்)



ஐந்தாவது அகவையில்!
**WIN அக்கடமி**
அல்வின் வீதி, காரைநகர்.

**A/L 2010 கலைப்பிரிவு**
தமிழ்:- திரு. காரை. S . கெங்கா B.A (Cey)
இந்து நாகரீகம்:- திரு. S. ஆதவன் B.A (Cey)
2009, 2010 புதிய பிரிவு
ஆரம்பம்:- 02.05.08 வெள்ளி மாலை 4.00 மணி
"ஒரே இடம் நிரந்தரம்" நிர்வாகி.


### யாழ் குடாநாட்டுச் சட்டத்தரணிகள் யாழ் குடாநாட்டு நீதிமன்றப் பணிகளைப் புறக்கணித்தல் பற்றிய அறிவித்தல்

26.04.2008ஆம் திகதியன்று, யாழ்ப்பாணத்தில் ஒன்றுகூடிய யாழ்.குடாநாட்டுச் சட்டத்தரணிகள் எதிர்வரும் 02.05.2008 ஆம் திகதி வெள்ளிக்கிழமையிலிருந்து யாழ் குடாநாட்டிலுள்ள சகல நீதிமன்றப் பணிகளைப் புறக்கணிப்பதெனத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளனர்.

27.10.2007ஆம் திகதியன்று யாழ்ப்பாணத்தில் புதிதாக திறந்து வைக்கப்பட்ட நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் சட்டத்தரணிகளுக்கென வரைப்படத்தில் ஒதுக்கப்பட்ட நூலகம், கட்சிக்காரர்களைச் சந்திக்கும் அறை, சிற்றுண்டிச்சாலை ஆகியவை இன்று வரை சட்டத்தரணிகளின் பாவனைக்கு வழங்கப்படாமையினால் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

சாந்தா அபிமன்னசிங்கம்(ஜ.ச)
*இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தின் வடக்கு வலயத்திற்கான உபதலைவர்.*
Zonal Vice President(North) of the Bar Association of SriLanka

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.04.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org